விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

அண்ணா கோப்பி

வாடிக்கையாளருக்கு

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில்

அண்ணா கோப்பியை ·

சுவைகுன்றுதுஉடனுக்குடன் அரைத்துப் பெற்றுக் கொள்வதோடு இனம் பொருட்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

# ஈழநாடு
## வார மலர்

*THE EELANADU VARAMALAR*

மாணவமணிகளுக்கு ஓர் நற்செய்தி

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள மில்க்வைற் காட்சி அறையில் 10 நீலசோப் அல்லது 2 பார்சோப் மேலுறைகளைக் கொடுத்து ஆத்திசூடி நூல் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்

யாழ்ப்பாணம்.

மலர் 20 | ஆவணி 11 | ரமழான் 22 | ஞாயிற்றுக்கிழமை | (27—8—78) | இதழ் 197

புதிய சட்டப்பிரிவு அமுலுக்குப்பின்

# பயங்கரக் குற்றச் செயல்கள் வெகுவாகக் குறைந்துள்ளன

## குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை பெற்றுத்தருவதில் பொலிசார் அக்கறை

### பிரதி பொலிஸ் மாஅதிபர் 'சுந்தர்' தகவல்

(யாழ்ப்பாணம்)

குற்றவியல் சட்ட விசேஷ ஷரத்துக்கள் 15-வது பிரிவின்படி பொலிசார் மேற்கொண்டுள்ள தீவிர நடவடிக்கைகளின் காரணமாக நாட்டில் குறிப்பாகத் தென் பகுதியில் ஆயுதம் தரித்த கோஷ்டி கொள்ளைகள், படுகொலைகள் போன்ற பயங்கர சம்பவங்கள் வெகுவாகக் குறைந்திருப்பதாகப் பொலிஸ் பிரதி மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.



சில மாதங்களுக்கு முன் தேசிய அரசப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்தின் நடைமுறை விளைவுகள் பற்றி வினவியபோதே திரு. ஆர். சுந்தரலிங்கம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

குற்றவியல் புலனாய்வுத் துறைக்குப் பொறுப்பாகவிருக்கும் திரு. ஆர். சுந்தரலிங்கம் மேற்படி சட்டத்தின் 15-வது பிரிவின் கீழ் பல பயங்கர குற்றவாளிகளை மடக்கிப் பிடிக்கவும், அவர்கள் தொடர்ந்தும் குற்றச்செயல்களில் இறங்காமல் இருக்கச் செய்யவும் முடிந்துள்ளது என்றார்.

மேற்படி பிரிவின்படி கொலைகள் புரிவோர், அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கிகள்-றிவோல்வர்கள் போன்ற ஆயுதங்களை வைத்திருப்போர், எறிகுண்டு வைத்திருப்போர் போன்ற குற்றவாளிகளைப் பொலிசார் கைதுசெய்து நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்தால், இக்குற்றச்சாட்டுகளுக்கான தகுந்த ஆதாரம் இருக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்ய முடியாது. இவர்களைப் பிணையில் விடுவது பற்றி உயர் நீதிமன்றம்தான் தீர்மானிக்க முடியும். இதனால் பெரும்பாலும் வழக்கு முடியும்வரை இவர்கள் விளக்கமறியலில் இருக்க நேர்கிறது.

பயங்கரக் குற்றவாளிகள் இவ்வாறு விளக்கமறியலில் இருப்பதனால் நாட்டில் குற்றச்செயல்கள் குறைந்துள்ளது என்று திரு. சுந்தரலிங்கம் விளக்கினார்.

(10-ம் பக்கம் பார்க்க)



வெண்ணெய் உண்ணும் மாயக் கண்ணன்
எண்ணும் பொழுதெலாம்
எம் முன் தோன்றுவான்

தந்தை செல்வாவுக்குப்பின்

## துணிச்சலும், நேர்மையும் கொண்ட அரசியல்வாதி

### அமிருக்கு வளாகத்தலைவர் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் தந்தை செல்வாவின் மறைவை அடுத்து தமிழ் தேசிய இனத்தின் தலைமையை ஏற்று நேர்மையாவும் துணிச்சலாகவும் அரசியலில் ஈடுபட்டுவரும் திரு. அமிர்தலிங்கம் பலராலும் பாராட்டக் கூடியவர். அவரின் 51வது பிறந்ததினத்தில் அவரை வாழ்த்துவதில் நான் பெருமையடைகின்றேன். இவ்வாறு யாழ். வளாகத் தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் திரு. அமிர்தலிங்கத்திற்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது அவர் நடித்த நாடகத்தில் அவரது துணிச்சலைப் பார்த்திருக்கின்றேன். அன்றிலிருந்து அவர் சகல துறைகளிலும் துணிச்சலுடன் போராடி

(10 ம் பக்கம் பார்க்க)

புதிய அரசியல் திட்டத்தில்

## இரண்டாம்தரப்பிரஜைகள் என எவரும் இல்லை

### யாழ். நகரில் தகவல் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியல் அமைப்பு திட்டத்தின் கீழ் இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரஜை எனஎவரும் இருக்க மாட்டார்கள். சகல மக்களுக்கும் அடிப்படை உரிமைகள் உண்டு அரசியல் அமைப்புக்கு எதிராக உலகில் எந்த நாட்டிலும் நீதிமன்றத்தில் சவால் விடமுடியாது ஆனால் அந்த உரிமை இலங்கை

(10-ம் பக்கம் பார்க்க)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

இராஜகோபுரக் கும்பாபிஷேக

7வது ஆண்டுத் திருவிழா

சூலமங்கலம் சகோதரிகளின்

இன்னிசை விருந்து

இடம்: இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

காலம்-நேரம்: 30-8-78 புதன்கிழமை இரவு 10-00 மணி

இலங்கை போக்குவரத்துச் சபையால் விஷேச பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

0111

## அமிருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்ப முடியவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் 51வது பிறந்ததினவிழாவையொட்டி வாழ்த்துச்செய்தி அனுப்புவதற்கு முடியாதிருப்பதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன அறிவித்துள்ளார்.

'அமிர்' பிறந்தநாள் விழாவுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புமாறு . ஊர்காவற்

10-ம் பக்கம் பார்க்க)

திருமண அழைப்பு

அம்பி - தேவா

நிகழும் காலயுக்தி வருஷம் ஆவணித் திங்கள் 11-ம் திகதி (27-8-78) முற்பகல் 11-40 வரையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில்

திருநிறைச் செல்வன்

மாணிக்கவாசகர் அம்பிகாபதிக்கும்

(JTEK CANADA)

திருநிறைச் செல்வி

சபாரெத்தினம் தேவராணிக்கும்

(S L S E C)

நடக்கும் திருமண வைபவத்திலும், 30-8-78 மாலை ஐயனார் கோவிலடி யாழ்ப்பாணத்திலுள்ள மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்புவசாரத்திலும் கலந்துகொள்ளும்படி நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

0117

# களிநடம் புரிகின்றான் கண்ணன்

களிநடம் புரிகின்றான்
கார் வண்ணனும் கண்ணன்
காளிங்கன் தலைமீது
களிநடம் புரிகின்றான்!

ஆணவம் தலைக்கேறி
அழிவுக்கு வழி தேடி,
நீதிக்குக் குழிதோண்டும்
நீசனின் தலைமீது
நிர்த்தனம் புரிகின்றான்
நீலவண்ணக் கண்ணன்
நிர்த்தனம் புரிகின்றான்

மாமலை தனைத் தூக்கி
மாதவர் தமைக் காத்து
வேதங்களை யெல்லாம்
வேள்வியில் புடம்போட்டு
போதனை புரிகின்றான்
பூமகள் நாயகன்
போதனை புரிகின்றான்

-பன்னீரன்

நாம் பாதையில் செல்லும்போது

# யாரும் தள்ளப்பார்த்தால் இடித்து கொண்டுபோவோம்

## நடிகர் ஜெய்சங்கர் சொல்கிறார்

(சென்னை)

'நமக்குள்ள பாதையில் நாம் செல்வோம். நம்மைத் தள்ளிவிட யாரும் முயற்சி செய்தால் இடித்துக்கொண்டு போவோம். இதுதான் என் நோக்கம்.'

இவ்வாறு நடிகர் ஜெய்சங்கர் தமது கொள்கையை விளக்கினார்.

நடிகர் ஜெய்சங்கர் 150 படங்களில் நடித்து முடித்ததை முன்னிட்டு கண்ணகி கலைமன்றம் அவருக்குப் பாராட்டு விழா நடத்தியது.

சென்னை ஊட்லண்ட்ஸ் ஹோட்டலில் நடந்த இந்த விழாவுக்கு வட சென்னை ஜனதா கட்சித் தலைவர் ஆறுமுகசாமி தலைமைவகித்தார். டைரக்டர் கே. எஸ். கோபால கிருஷ்ணன் ஜெய்சங்கருக்கு மலர்கிரீடம் சூட்டி, பொன்னாடை போர்த்தினார்.

அப்போது அவர் ஜெய்சங்கரைக் கட்டித்தழுவி முத்தமிட்டார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து ஜெய்சங்கர் பேசியதாவது:-

சினிமாவில் எத்தனையோ நடிகைகளைக் கட்டியணைத்து நெருக்கமாக நடிக்கிறோம். அப்போது சில நடிகைகள் முத்தம் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுத்த முத்தத்தைவிட இப்போது டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் முத்தம் கொடுக்கும்போது உண்மையிலேயே உணர்ச்சி வசப்பட்டுப்போனேன். காரணம், நடிகைகள் கொடுத்தது வெறும் நடிப்பு. ஆனால் கே. எஸ். ஜி கொடுத்த முத்தம் உளமார வாழ்நாள் முழுவதும் நினைக்கும் அளவு உள்ளது.

### நடிகைகள் வேண்டாம்

எனக்குப் பாராட்டு விழா நடத்தப்போவதாகச் சொன்னதும் நடிகர், நடிகைகளை அழைக்கவேண்டாமென்று சொன்னேன். ஆனால் டைரக்டர் கே. எஸ். ஜி யை அழைப்பதாகச் சொன்னதும் மகிழ்ச்சி அடைந்தேன். அவர் வாழ்த்துவது குரு சீடனை வாழ்த்துவதுபோல.

நடிகனைப் பொறுத்தளவில் யாரும் நிலைத்திருந்ததில்லை. என்னைப் பொறுத்தளவில் முன்னால் இருந்த நடிகர்களைப் போல் தியாகராஜபாகவதர், பி. யு. சின்னப்பா, எம். ஜி. ஆர்., சிவாஜி மாதிரி நானே சாதனை புரிந்துவிட்டதாகச் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் அந்தச் சாதனையில் பங்குபெறுபவன் மட்டுமே நான்.

### இடித்துக்கொண்டு

எனக்குள்ள நோக்கம் 'நமக்குள்ள பாதையில் நாம் செல்வோம். நம்மைத் தள்ள யாராவது முயற்சி செய்தால் இடித்துக்கொண்டு தான் போகவேண்டும்.' (வெள்ள. நிரு.)

# '16 வயதினிலே' டைரக்டர்! இலங்கை வருகிறார்

[சென்னை]

தமிழகத்தில் பெரும்பரப்பையூட்டிய '16வயதினிலே' என்ற திரைப்படத்தை டைரக்ட் செய்து இளைய தலைமுறையினரால் தரமான தமிழ்ப்படங்களை தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கையையூட்டிய டைரக்டர் பாரதிராஜா அக்டோபர் மாதம் இலங்கைக்கு வருகிறார்.

டைரக்டர் பாரதிராஜா இலங்கைக்கு வரவிருக்கும் தகவலை மாம்பலத்திலுள்ள அவரது இல்லத்தில்வைத்துஅவரே தெரிவித்தார்.

தற்போது தமிழகத்தில் திரையிடப்பட்டு வருகிற முழுக்கமுழுக்க புதுமுகங்களை வைத்து தயாரிக்கப்பட்டுள்ள 'கிழக்கே போகும் ரயில்'என்ற திரைப்படத்தை திரைக்கதை அமைத்து பாரதிராஜாவே டைரக்ட் செய்துள்ளார். கமலஹாசன், ஸ்ரீதேவி நடிக்கும் 'சிவப்பு ரோஜாக்கள்' என்ற படத்தை டைரக்ட் செய்து வருகிறார். இது அக்டோபரில் முடிந்ததும் இலங்கைக்கு வருவார்.

டைரக்ட்டர் பாரதிராசா தமது வெற்றிப்படமாக '16 வயதினிலே' திரைப்படத்தை இந்தியிலும் டைரக்ட்செய்துள்ளார். இவரது 16 வயதினிலே திரைப்படத்தில் இடம்பெற்ற 'செந்தூரப் பூவே' என்ற பாடல் பாடிய பாடகி ஜானகிக்கு அகில இந்திய பாடகி என்ற பரிசு கிடைத்தது குறிப்பிடத்தது.

[வெள். நி]


## விற்பனைக்கு

51 பரப்பு தோட்டம் செய்யக்கூடிய தரிசு நிலம் அச்சுவேலி இறையில் தொழிற்பேட்டைக்கு அருகாமையில் உண்டு. விபரங்கட்கு தொடர்புகொள்ளவும்: என். ஆர். சந்திரன், 'பொன் அகம்,' நாவலடி வீதி, திருநெல்வேலி. 0063

10 பரப்பு வீடு கட்டும் காணி, சுன்னாகம்-கந்தரோடை வீதியில், சந்தியில் இருந்து ½ மைல் தூரம். சிறந்த, அமைதியான சுற்றுடல். பரப்பு 9,000/- மேல். விபரங்களுக்கு ஆர். இளையதம்பி, பெற்றோல் நிலையத்திற்கு அருகாமை, சுன்னாகம். 0151

வல்வெட்டித்துறை; நெடியகாடு-பொலிகண்டி செல்லும் குறுக்கு ரோட்டில் N. Y. S. C மைதானத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் காவாவோடை 1 ஆம் துண்டு 4½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெமினி பா(f)ன்சி பலஸ், பஸ்ஸ்ராண்ட், பருத்தித்துறை. 0167

ரக்டர் MF 135, - 7000 தொடர் இலக்கத்திலுள்ளது. தொடர்பு: ஐ. சங்கரப்பிள்ளை, சூராவத்தை, சுன்னாகம். (அர்ச். திரேசம்மா கோயில் அருகில்) 0156


# ஒரு பாராட்டுக் கடிதம்

இருபது வயதுடைய உயிர் இளங்குமரன் சுந்தரசொரூபன் 'ஈழநாடு'தான் தலைப்பாகையுடன் தோற்றுகின்றுனே! என்ற எண்ணம் மேலோங்க கடந்த வாரம் 'ஈழநாடு' வாரமலரை முதல் பக்கத்தில் நோக்கினேன். ஆனால் 'கலாயோகி ஆனந்த குமாரசாமியின் இளமைக் காலத் தோற்றமிது' என்ற கீழ்க்குறிப்பு-எனது ஐயுறவை நிவர்த்தியாக்கியது. 'உண்மையே அழகு! அழகே உண்மை' என்று ஓர் ஆங்கிலப்புலவன் கூறியுள்ளான். இத்தகைய இலட்சனமான படங்கள் எமது அழகுச் சுவையை விருத்திபண்ண வல்லவன.

நாட்டிற்கு- ஏன் - பத்திரிகைக்கு- கப்பல்- தோணிக்கு எல்லாம் பெண்களின் பெயரைச் சூட்டுவதும் ஓர் ஆங்கில மரபு. 'தாய் நாடு', 'குவீன் எலிசபெத்' 'குமுதினி' 'சுந்தரி' 'மஞ்சரி' என்று உதாரணங்கள் சொல்லலாம். 'தகப்பன்-நாடு' என்று கூறுவதில்லையே. ஆகவே 'ஈழநாடு' வாரமலரில் ஒய்யாரமாகத் தோன்றும் முதற்பக்க ஆடலரசி-சுந்தரவதனி-அபிநய சுந்தரி தான் ஈழநாட்டின் இளமைத் தோற்றமோ! என்றால் அஃது 'தெய்வம் தந்த வீடு' கதாநாயகி செல்வி ரேலங்கா குமுதினி என்று கீழ்க் குறிப்பில் காணப்பட்டது.

இத்தகைய வண்ணப்படங்களை ஈழநாடு தாங்கிவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அன்றைய இதழில் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பாராட்டு விழாப் படங்கள், கலைக்குரிசில் சிவாஜியுடன் ஈழத்து படப்பிடிப்பாளர் திரு. வி. ரி. ஈ. பொன்னுச்சாமி ஆகியவர்களின் படங்கள், அக்குபங்சர் முறைப்படங்கள் ஆகியனவும் அழகு செய்கின்றன.

வட பகுதியில் ஒரு தினசரியை சித்திகரமாக நடாத்தும் ஈழநாடு நிறுவனம் நல்ல படங்களைத் தெரிவுசெய்து போடுவதிலும் ஒரு தனித்துவத்துடன் மிளிருகின்றதே! இது பாராட்டுவதற்குரியதாகும்.

ஆசிரியமணி
ஆர்.ரி.சுப்பிரமணியம்


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சுன்னாகத்தில் காங்கேசன்துறை வீதிக்கு மிகச் சமீபத்தில் நல்ல கேந்திரத்தில் திருத்தி அமைக்கக்கூடிய கட்டிடம், கிணறு வசதியுடன் 4 பரப்புவரையில் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr. மு. சுவாமிநாதர், சுன்னாகம். 0139

நல்ல நிலையிலுள்ள றலி பைசிக்கிள் ரூபா 850, புதிய கஸெற் ரேப் ரெக்கோடர், நல்ல நிலையிலுள்ள G E C மெயின் செற். 78- அரசடி வீதி, யாழ்ப்பாணம். 0155

## தேவை

பிரபல்யமான விளையாட்டு பொருள் உற்பத்திசெய்யும் ஸ்தாபனத்திற்கு கடைச்சல் வேலை தெரிந்தவர்கள்தேவைப் படுகின்றனர். வேலைபழகஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 10-9-78. விளம்பர இல: 0161, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0161

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல்யமான அச்சுக்கூடத்துக்கு பிளேற்றன், சிலிண்டர் மிசின்களில் வேலைசெய்வதற்கும், அச்சுக்கோர்ப்பதற்கும். புத்தகம் கட்டுவதற்கும் தொழிலாளர் தேவை. இவ்வேலைகளில் பயிற்சிபெற விரும்புபவர்களும்விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 0150, ஈழநாடு பேற் பார்த்து, யாழ்ப்பாணம். 0150

யாழ். நகர எல்லைக்குள் வசிக்கும் கணக்கியல் ஆங்கில அறிவுடைய பெண் காசாளர் தேவை. தொடர்புகொள்ளவும்: மலேயன் றேடியோ சேர்விஸ், இல. 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0147

H. C., L. C. இனிப்புத் தயாரிப்பதில் நல்ல அனுபவமுள்ள தொழிலாளர் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் 31-8-78 காலை நேரடியாக வரவும். கண்ணுபுர டக்ஸ், சுன்னாகம். 0158

## தேவை

சகல பிடவை வியாபாரத்திலும் பத்து வருடங்கட்கு மேல் அனுபவமுள்ள பிடவை விற்பனையாளர்கள் தேவை. இருபாலாரும் உடனே நேரில் தொடர்புகொள்ளவும். க. நாகமுத்து அன் சன், 48-40, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 0145

நாணயமான குடும்பத்துக்கு யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் சகல வசதிகளுடன் அமைந்த வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் தரப்படும். திருமதி சண்முகநாதன், 66, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0168

## வகுப்புகள்

நவீன கேக் அலங்கார வகுப்புகள், பிறந்த நாள் கொண்டாட்ட கேக் மற்றும் கேக் பூ வகைகள் உட்பட 9-9-78 முதல் வாரந்தோறும் நடத்தப்படும். தொடர்பு கொள்க. திருமதி றீட்டா போல், 'ரோகினி' 33, நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 0160

## WANTED

Wanted Book-Keeper/Accounts Clerks with at least five years experience and able to maintain books in English. Age below 30 years and salary Rs. 300/- Rs 350/- according to qualifications and experience. Apply before 4-9-78 to Autos Ltd., 190, Hosp tal Road, Jaffna. 0164


# இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை மக்கள் வங்கியில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமைபுரிந்த திரு. ஆ. சிவராசா முல்லைத்தீவு மக்கள் வங்கிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.


ACADEMY OF LAW
சட்டக் கல்வியகம்
First in Laws-ஏப்ரல் 79
Final in Laws-ஏப்ரல் 79
தமிழிலும் ஆங்கிலத்திலும்
3-9-78 முதல்
ஞாயிறு வகுப்புகள் ஆரம்பமாகின்றன
விபரங்களுக்குத் தொடர்பு கொள்க :
பதிவாளர் :
சட்டக் கல்வியகம், பிரதானவீதி, பருத்தித்துறை.
0162



உ

## திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் காலயுக்தி ஆண்டு ஆவணித் திங்கள் 14ஆம் நாள் (30-8-78) புதன்கிழமை காலை 9-17 மணி முதல் 10-53 மணி வரையுள்ள துலா லக்கினத்தில் வரும் நல்வேளையில்


| | |
|---|---|
| எனது மகன் திருநிறை செல்வன் கிருஷ்ணமூர்த்தி (மின் பொறியியலாளர், சமனல) அவர்கட்கு | எமது மகள் திருநிறை செல்வி யசோதா அவர்களை |

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் மேற்படி திருமணம் மணமகளில்லத்தில் நிகழத் திருவருள் கூடியுள்ளது. ஆகவே தாங்கள் குடும்பத்தோடு வருகை தந்து மணமக்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திருமதி தை. நமசிவாயம் ''உமையகம்'' சரசாலை, சாவகச்சேரி. | க. மகேஸ்வரன் தம்பதி (உப-அதிபர் சா.இ.கல்லூரி) ''அயோத்தியா'' சரசாலை, சாவகச்சேரி. |

0165



# தொல்லை இனி இல்லை!

கீழ்கரவை பொன்னையன்

''ச்... இதென்ன தொல்லை... தொல்லைக்கு மேலே தொல்லை தொல்லைக்கு இனி எல்லை இல்லையா?''

எத்தனை தொல்லைகளை அவன் சந்திப்பது... ஒன்றா இரண்டா... அவன் மனம் சலித்துவிட்டது...

அவன் வாழ்வில் விரக்தி ஏற்பட்டுவிட்டது.

அவன் எதிர்பார்த்தது போல் எதுவும் நடைபெறவில்லை. அவன் எண்ணம் போல்-மனம் போல் எதுவும் நடந்தால் அதைவிட வேறு என்னவேண்டும். இதனைத்தான் அவனும் விரும்பினான்-இயற்கைதானே. ஆனால் நினைத்தபடி எதுவும் நடைபெறுகிறதா? இல்லையே. இதுதான் வாழ்க்கையா? எண்ணங்கள் யாவும் நிறைவேறுவதில்லைப்போலும்... இல்லையேல் மனிதன் நிறைவேறும் எண்ணங்களை நினைப்பதில்லைப் போலும்.

நிறைவேறாது என்பதற்காக எதையும் நினையாது இருக்க முடிகிறதா? இல்லைப்போலும்.

இது அவனுக்கும் விதிவிலக்கல்ல. அவனும் எத்தனையோ நினைக்கின்றான். அது நிறைவேறுமா? இதுவரை நிறைவேறியதா? அதற்காக நினைக்காமல் இருக்கமுடிகின்றதா?... அது மனித மனம்...

இதுவரை இல்லை. நினைத்தவை நிறைவேறவில்லை. போகட்டும்... தொல்லைதொந்தரவு குறையட்டுமே-அது தொடர்கிறது...அவன் பணத்தை விரும்பவில்லை-குணத்தையே விரும்புகின்றான்; பக்கபலத்தை விரும்பவில்லை-நல்ல மனத்தையே விரும்புகின்றான். ஆடம்பரத்தை விரும்பவில்லை-ஆடல் பாடலை விரும்புகின்றான். இத்தனைக்கும் மேலாக மன நிம்மதியையே விரும்புகின்றான். அது அவனுக்குக் கிடைக்கின்றதா? இல்லை...ஆனால், ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டியது நிம்மதிதான்... நிம்மதியற்ற வாழ்வு... தேன் சுவைக்க விரும்பிக் கையை விட்டால் குழவி குத்திவிட்ட கதை... தேனைச் சுவைத்ததும் இல்லை...கைவலியைத் தாங்கவும் முடியவில்லை.

அவனுக்கு யார் இருக்கிறார்கள்?'-உறவு என்று சொல்ல யாரும் இல்லை. வீட்டைவிட்டுப் புறப்படும்போது மனதில் ஓரளவு மகிழ்ச்சி ஓடிவரும்... வீட்டிற்குத் திரும்பிவரும்போது அவன் மனதைவிட்டு மகிழ்ச்சி ஓடிவிடும்...! காலையில் புறப்படுவான்; மாலையில் வருவான். ஒருபொழுது கவலையை மறக்க முயற்சிக்கின்றான் ... அவன் மனம் மறக்க முயன்றாலும்-அவனால் முடிவதில்லை. அவன் மனதில் எண்ண இயலாத எண்ணக் குவியல்கள். துன்பச் சுமைகள்...வேதனைக் குரல்கள்...காலையில் மலரும் மலர், மாலையில் வாடிவிடும்-இன்பப் பொழுது பகல் பொழுது; மாலையில் மலரும் மலர் காலையில் வாடிவிடும்-இன்ப இரவு மலருக்கு; இம்மலர்கள் ஒருவேளைப் பொழுதை மலர்ந்த முகத்துடனும், நறுமணத்துடனும்-அழகுடனும் கழிக்கின்றன. மறுவேளை வாடிவிடுகின்றன. மலரும்போதுதான் வாசம் பிறக்கின்றது...மலர்ந்த மலரைத்தான் கவிஞனும் பாடுகின்றான்...மலர்ந்த மலரைத்தான் தெய்வத்துக்கும்-பூசைக்கும் பயன்படுத்துகின்றனர். உயர்ந்த மலர்...அதுவும் வாடிய மலரை யார்தான் பாடுவர்? தெய்வம் ஏற்குமா? ஒரு பொழுதையாவது கவலையில்லாமல் கழிக்க முயன்றாலும் அவனால் முழுக்க முழுக்க வெற்றியடையமுடிகின்றதா? ஒரு பொழுதை மனமகிழ்வுடன் கழித்தாலே அவனுக்குப் போதும். வாழ்க்கையில் இதைத்தவிர வேறு என்ன வேண்டும். காலை மலரும் மலருக்கு-கமலத்துக்குத் துணையிருப்பான் கதிரவன். மாலை மலரும் மலருக்கு- அல்லிக்குத் துணை இருக்கும் வான்மதி-சந்திரன். ஒருவேளை...அவனுக்கும் மகிழ்ச்சிதர...யாராவது வேண்டுமா? மனித வாழ்க்கையே பாசக்கயிற்றினால் கட்டுப்பட்டு, பின்னிப்பிணைக்கப்பட்டுத்தானே இருக்கின்றது. அத்தகைய பாசப்பிணைப்புக்கு ஏங்குவது மனித மனத்தின் இயல்புதானே.

அவன் ஒரு தனி மரம்...

தனிமரம் என்றும் தோப்பாகாது வீட்டில்நுழையும்போது! அதை நன்கு உணரமுடிந்தது அவனால். வேலை முடிந்து வீட்டிற்கு வரும்போது 'அம்மா' என்றபடிதான் வருவான்... இன்றும் அப்படி அழைத்துப் பார்த்தான்...ஆனால் பதில் இல்லை. ஒரே நிசப்தம்...வீடு பூரண அமைதிகொண்டிருந்தது...கலகலப்பாக இருந்த வீடு...கலகலப்பாக இருக்க விரும்புபவன் கதிகலங்கிப்போய் இருக்கின்றான். தாய்தான் அவனை விட்டுப் பிரிந்துபோய் ஒருமாதமாயிற்றே...அவன் ஒரு தனிமரந்தானே.

ஓலை வீடுதான் ஒழுகும் கூரைதான்; ஒடிந்த சுவர்தான இடிந்த நிலைதான்... தனிமரத்து வீடுதான்... வீட்டைப்போல் அவன்-அவனைப் போல் வீடு...அவனுக்கென்று இருக்கும் ஒரே இடம் அதுதான்...தாய்விட்ட சொத்து... தாய் வீட்டுச் சொத்து. அங்கு யாரும் இல்லை. இப்போது... அவனைத்தவிர, என்றாலும் தாய் இருந்தால்... ''வா... மகனே...'' என்று ஆசையுடன் அணைத்துக் கஞ்சியாவதுவார்ப்பாள்... இன்று ஒன்றும் இல்லை...இன்று அவனது பிறந்த நாளும்கூட...பிறந்துதான் என்ன பயன்... வறுமையா?... உழைக்கிறான் வறுமை எனலாமா? ஏன் பசி இருக்கவேணும்? ''ச...ச...பிச்சைக்காரன்கூட நிம்மதியாக இருக்கிறான். அவனுக்கு பிச்சை போட நாலுபேர் இருக்கிறார்கள்...எனக்குப் பசிக்கு...தர யாரும் இல்லை. ஏன் அன்புக்கு...அன்பைச் செலுத்த யாரும் இல்லை...''

இதை எண்ண எண்ண அவன் கண்கள் குளமாயின. இதயம் துன்பத்துயரால் வெடித்தது... வாழ்வா?... சாவா? அவன் தன்னைத் தானே கேட்காமல் இருக்க முடியவில்லை. வாழ்வு...என்ன வாழ்வு. இதுவரை வாழ்ந்து என்ன பலன் கண்டது. தொல்லைதான் மிச்சம்.

சா...

ஒரு கணப்பொழுதில் வரவழைத்துவிடலாம்.

ஆனால் ... கோழையின் செயல...

சாவது கோழையின் செயலா? அப்படியானால் வாழ்வது வீரனின் செயலா?

எந்த வீரனாவது சாக முன் வருவானா? சாகப்பயந்தவனுக்குவீரன் என்ற பட்டம். சாவது அனைவராலும்முடியாத ஒன்றுதான்...தோல்விக்கு அது மருந்தாகின்றது... ஆனால், சாவது கோழையின் செயல் என்பதை மனம் ஒப்புக்கொள்ளவே செய்தது. ஆனால் அழுவது. அதுவும் கோழையின் செயல்தானே! அதைத்தடுக்க அவனால் முடியவில்லை. தன் சுமையைச் சொல்லி ஆறுதல் பெற...அதை இறக்கிவைக்க... தேற்ற யார் இருக்கிறார்கள். நம்பிக்கையானவர்களிடம் தானே துன்பச் சுமையைச் சொல்லி ஆறுதல்பெறலாம். நம்பிக்கை என்று இருந்தவர்களே... விலகிவிட்டால்...

அவனுக்கென்று ஒரு துணை மரம் இருந்தாலாவது... ஆறுதல்பெறலாம். வாழ்க்கை ஒளிமயமானதாகலாம். துணைமரம் இருந்தால - தனிமரத்துடன் துணைமரமும் இணைந்து தோப்பாகலாம்தானே...! தன் தனி வாழ்க்கையை எண்ணாமல் அவனால் இருக்கமுடியவில்லை. அவன் அதை எண்ணாமல் வாழவிரும்பினாலும் பாழும் மனம் ஒருமுறை எண்ணாமல் விடுகிறதா? இதுதான்மனிதன் வாழும்முறையா?

வீட்டில் நுழைந்தவன் பேசாமல் ஒரு கதிரையில் அமர்ந்தான். யாருக்காக வாழவேண்டுமென்ற விரக்தி மனதில் இழையோடியது. வீடு முழுவதும் தூசியும்மணலும்...உடுப்புகள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன... அநாதைகளாக... இல்லத்தைச் சுத்தமாக வைத்திருக்கும் பொறுப்பு இதுவரை இருக்கவில்லை. தன் உள்ளத்தை மட்டும் சுத்தமாக வைத்திருக்கும் பொறுப்பை ஏற்றிருந்தான். இன்று எத்தனையோ பொறுப்புகள் ... கடமைகள் அவன் கையில். யாருக்காக...!

கண்ணை மூடினான். கண்ணீர்த்துளிகள் கன்னத்தில் துள்ளி ஓடின. அவன் எப்படியோ வாழவேண்டியவன்... இன்று... இப்படி? ஆறுகள் என்றும் பின்னோக்கிப் பாய்வதில்லைதான்...ஆனால் அவன் வாழ்க்கை பின்னோக்கிப் பாய்ந்துகொண்டிருக்கின்றது.

படிகள் என்பதுமேலே ஏறிப் போவதற்கு மட்டுமல்ல அது இறங்கிவருவதற்கும்... இல்லை...இறக்கி விடுவதற்கும் உதவுகின்றன.

ஏணி என்பது ஏற்றிவிடுவதற்கு மட்டுமல்ல இறக்கிவிடுவதற்கும் அதே ஏணிதான்... அவனைப்பொறுத்தவரை எத்தனையோ உண்மை இதில் பொதிந்துள்ளது

''ஆனந்...''-ஒரு குரல். பழக்கமான குரல். கண்ணை விழித்தான். தலையெல்லாம் பூச்சுமை...அவன் மனதிலும் ஏதோ ஒரு சுமை... மனச்சுமை...அன்றலர்ந்த முகந்தான்-வான் மதியும்தோற்கும் இம்முகம் கண்டு. பூவா? பூவையா...? மலர்தான் அவன் முன்னால் நின்றாள். அவளுந்தான் ஆனந்தனின் மனதில் இடம்பிடித்துவிடலாம் என்று எண்ணுகின்றாள். நினைக்கிற அத்தனைபேருக்கும் மனதில இடம்கொடுக்க அவன் இதயம் என்ன தங்குமடமா? இல்லை அன்னசத்திரமா?

மலர் தொடுக்கும் அன்புத் தொல்லை அவனை வாட்டவே செய்தது... ஏற்கமுடியவில்லை. தாய் செத்தபின்...அவள் கதறி அழுதாளே...அது அவன் மனதில் நிலைத்து நின்றது...ஆனால் அவளை நினைத்து வாழவில்லை. அவனுக்குத் தன்னிடத்தில் ஒரு நிரந்தர இடம் உண்டு என்பதை சொல்லாமல் சொல்லிக்காட்டி வந்திருக்கின்றாள். ஆனால் அவள் நினைக்கும் அன்பை அவனால் வழங்கமுடியவில்லை,

''பால்வேண்டுமா?- பருகுங்கள், பழம்வேண்டுமா?- சுவையுங்கள்; பக்கத்தில் வரவேண்டுமா?-இதோ சித்தமாக இருக்கின்றேன். பாலைப் பருக்கிவிட வேண்டுமா?-இதோஎன் கரம் இருக்கின்றது. பழத்தைஊட்டிவிடவா? - உரித்துத்தரவா? நான் வேண்டுமா? - இங்கேதான் இருக்கிறேன். என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள்... செய்கிறேன்.

அவளின் கண்களின்பார்வை இத்தனையையும் பேசும்...

அவளின், கண்களைச் சந்திக்கும் சக்தி அவனுக்குஇல்லை, அந்தக் கண்கள் - பார்வைபேசும் கதைக்கு அவனால் பதில் சொல்லமுடியாது...

சிலவேளை அவன் கோபிப்பதும் உண்டு.

''பேசியது நானல்ல கண்கள்தானே; நினைப்பதுநானல்ல நெஞ்சம்தானே'' என்று கூறி மழுப்பிவிடுவாள். அதைச் சொல்லும்போதே அவளின் மனதின் எண்ண அலைகள் சொல்லின் அலங்காரமாக வருவதை உணராத - உணரமுடியாத முட்டாளல்லஅவன்.

ஆனந்தனைப் பொறுத்தவரை அவன் வாழ்வில் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறான், பழகியுமிருக்கிறான். அவன் மனதைத்தொட்டது ஒரே ஒருத்திதான்.

''என்வாழ்வில்எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கின்றேன். இப்படி ஒரு பெண்ணைக் காணவில்லை. என் வாழ்வில் கண்ட குணம், சிரித்த முகம், சாந்தமான பார்வை, அமைதியான போக்கு-கள்ளம் கபடம் இல்லாத வெள்ளையுள்ளம்-குமுதமலரைப் போன்ற மென்மையான தன்மை, உள்ளத்தில் பட்டதைப்பட்டென்று சொல்லும் பாங்கு-பூவிலும் மென்மையான இதயம்-ஆயிரத்தில் ஒருத்தி-பார்வையில் குமரிதான் பழக்கத்தில் குழந்தை-அவளை வர்ணிப்பதென்றால்...

நத்தையிலிருக்கும் முத்து... முட்களின் நடுவே மலர்ந்த ரோசா...வானில் நீந்தும்வெண்ணிலா...தெய்வமகள் வையத்தில் வந்ததோ?

ஒரேவார்த்தை ... 'குணமணி'-அவன்மனம் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் ... சொல்லும்.

''என்ன ஆனந்... மௌன விரதமோ?''-இது மலர், ஒரு கனவுலகிலிருந்துமீண்டவன்... ''என்ன...''என்றான்.

(4-ம் பக்கம் பார்க்க)

## குட்டிக்கதை

# துரோகி!

'ரவி

''ஏய் லல்லி, இன்னுமா கிளம்ப வில்லை?''

இதோ......ஒரு நிமிடம்......

...............

''அப்பாடா, ஒரு வழியாக முடிந்ததா உன் அலங்காரம். சரிசரி. வா உன்னை நான் போகும் வழியிலேயேரேடியோ நிலையத்தில் இறக்கிவிடுகிறேன்'' என்று அவசரப் படுத்தினான் சுரேஷ். எப்போதுமே அவன் அலுவலகம் கிளம்பும்போது வீடு இரண்டாகிவிடும். இன்று அவளும் கிளம்புவதால் அமளி அதிகமாக இருந்தது. இந்த லட்சணத்துக்கு அவர்களுக்கு குழந்தைகள்கூட இல்லை. இருவரையும் ஏற்றிக்கொண்ட ஸ்கூட்டர் பறந்தது.

சுரேஷ் பிரபல ஏற்றுமதி வர்த்தகக் கம்பெனி ஒன்றின் சென்னைப்பிரிவில் உதவிமேனேஜராகப் பணிபுரிகிறான். கை நிறையச் சம்பளம். தாய் தந்தையர் கிராமத்தில் இருந்தனர். தந்தைக்குப் பட்டினம் என்றாலே பிடிக்காது. அது மட்டுமல்ல மகன் கலப்புத் திருமணம் செய்துகொண்டானே என்ற கோபம் வேறு அவரை கிராமத்திலேயே தங்க வைத்துவிட்டது. லலிதா மனையியல் கல்லூரியில் பி.எஸ் ஸி. வரை படித்திருக்கிறாள். அவள் படித்துக்கொண்டிருந்த சமயம் சுரேஷ் எம். ஏ. படித்து முடித்துவிட்டு வேலைதேடிப்படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு நாள் சினிமா பார்க்கப் போனபோது தான் அவனுக்கு லலிதாவின் அறிமுகம் கிடைத்தது. தியேட்டருக்கு சற்று முன்னதாகவே சென்றுவிட்ட சுரேஷ் வெளியில் நின்று வேடிக்கை (?) பார்த்துக் கொண்டிருந்தான். அச்சமயம் பஸ்ஸை விட்டு இறங்கி வந்த லலிதா அவசரமாகத் தியேட்டரில் நுழைவதற்கும், உள்ளேயிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று படபடத்து வருவதற்கும் சரியாக இருந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் சுரேஷ் அவளை இழுத்துவிட்டான். பிறகு?

பிறகென்ன, சென்னை மெரினா கடற்கரை—பஸ் நிலையம்—மூன்று அடுக்குத் தியேட்டர்கள் என்று அவர்களது நட்பு வளர்ந்தது.

எப்படியோ சுரேஷுக்கு வேலைகிடைக்கவும் லலிதாவுக்குப் படிப்பு முடியவும் சரியாக இருக்கவே, மனப்போல மாங்கல்யம் கிடைத்தது. காரணம் தாய் தந்தையற்ற லலிதாவை அவனது மாமாதான் வளர்த்து வந்தார். இவளை எப்படியோ தள்ளிவிட்டால் போதும் என்றிருந்த அவருக்கு சுரேஷ் ஆபத்பாந்தவனாகவே காட்சியளித்தான். திருமணத்தின் பிறகும் லலிதாவுக்கு நடிப்பின்மீது ஆர்வம் இருந்ததைக் கண்டு (கல்லூரி நாடகங்களில் நடித்துப் பாராட்டு பெற்றிருக்கிறாள்) வானொலி நாடகங்களில் நடிக்கச் சம்மதித்தான். அவளும் நடித்து வந்தாள். இன்றும் கூட அதே காரியமாகத்தான் போகிறாள்.

சென்னை வானொலி நிலையத்தில் மனைவியை இறக்கிவிட்ட சுரேஷ் ''லல்லி நான், மாலையில் வீடுவரமாட்டேன். ஆடிட்டிங் அலுவலகக் கணக்குகளை நேர் செய்யவேண்டும். இரவு எப்போது வருவேனோ தெரியாது. நீ பத்திரமாக வீடு போய்ச்சேர்'' என்று கூறிவிட்டுப் போனான். அலுவலகத்தில் அன்று முழுவதும் வேலை அதிகமாக இருந்தது. மாலையில் சற்று தலைவலிக்கவே இரண்டு தலைவலி மாத்திரைகள் சாப்பிட்டான். ஆனால் நேரம் செல்லச்செல்ல உடல் சுட ஆரம்பித்தது. காய்ச்சல் ஏறுவதற்குள் வீடுபோய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடன் மனேஜரிடம் அனுமதி வாங்கிக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினான். பாழாய்ப்போன ஸ்கூட்டர் வேறு வீட்டுக்கருகில் வந்து நின்றுவிட்டது. அசதியும எரிச்சலும் மேலிட தள்ளிக்கொண்டே வீடு வந்தான். படியேறி கதவைத் தட்டப் போகும்போது வீட்டினுள் யாரோ இருவர் பேசும் குரல் கேட்கவே சற்றுத் தயங்கி நின்றான் ஒன்று லலிதாவினது குரல் என்பதை உடனே கண்டுபிடித்துவிட்டான். மற்றது அறிமுகமில்லாத ஆடவன் ஒருவனுடையது.

வீட்டில் யாரும் இல்லையா?

இப்போதைக்கு நம்மைத் தவிர யாரும் கிடையாது நீங்கள் தைரியமாக டாக்ஸி கொண்டுவாருங்கள். நம் திட்டப்படிகிளம்பிவிடுவோம். அத்தான் நான் உங்களுடன் கிளம்பும் இந்த நாளை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்''

வெளியே நின்ற சுரேஷுக்கு முகம் சிவந்து கைகள் முறுக்கேறின. அவனிடமிருந்து 'துரோகி' என்ற வார்த்தை வெடித்து வெளிவந்தது. அவனுடைய உதையைத் தாங்க முடியாமல் கதவு சுவரில் மோதியது. புயல் போல்

(9-ம் பக்கம் பார்க்க)

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

# சிறுகதை

''நீங்கள் உங்கள் வாயால் ஒன்று சொல்ல வேணும்...'' இதே வார்த்தையை வேறு எங்கேயோ கேட்டிருக்கின்றான். அவன் இதயத்திலிடம் பிடித்த ஒருத்தி கேட்டகேள்வி தான் இது. இதே கேள்வியைத்தான் கேட்டாள்...அதே கேள்வியைத்தான் மலரும் கேட்கிறாள்,

''பாலுக்குள் வெண்ணெய் இருக்கும்'' என்றான் அங்கு... அன்று... ''என்ன சொல்ல வேணும்'' என்றான் இங்கு இன்று. மலரின் முகத்தைப் பார்த்தபடிகேட்டான் ''நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்லவேணும்...''- மலர்தான் சொன்னாள். அவன் மனம் ஒருகணம் தன் மனதில் இடம்பிடித்தவனிடம் ஓடிச் சென்றது. ''என்னை தங்கை யெண்டு சொல்லவேணும்...''

அவன் காதில் அச்சொற்கள் ரீங்காரமிட்டன,

தனக்கொரு தங்கைவேண்டு மென்று எதிர்பார்த்தான். தங்கை கிடைத்துவிட்டாள். கூடிப்பிறந்தால்தான் தங்கையா?

ஆனால் இப்படியான துணைவி வரவேண்டுமென்று அவன் விரும்பவில்லை.

துணையாக நான்வருகின்றேன் ஏற்கவேண்டுமென்கி-றான்-இவள். பெண்களில் எத்தனை விதம்.

ஒருத்தியின் பாசம் உடன் பிறப்பில் - இதயத்தோடு வளரத் துடித்தாள் ... ஒருத்தியின் நேசம் உடல் லயிப்பில் - உடலோடு இணையத் துடிக்கிறாள். ஆனால்...

உடன்பிறப்பாக இருக்க வேண்டுமென்றவள் இனிமே பாசம் இல்லையென்று போய் விட்டாளோ ... அண்ணன் தேவையில்லையென்று எண்ணி விட்டாளோ? அண்ணன் துடித்தால் தங்கை கண்ணி நீர் வடியும், தங்கையின் கண்ணில் நீர்வடிந்தால் அண்ணன் நெஞ்சில் உதிரம்கொட்டும் என்று வளர்ந்த பாசம்.

அண்ணன்மீது என்ன தவறைக்கண்டாளோ தங்கை; பாசக் கயிற்றை அறுத்துவிட்டாள்போலும். தங்கையின் தொல்லையை வேண்டிநின்றான்...ஆனால், இல்லையென்று விட்டாள்.

எங்கே அவள்? எங்கிருக்கிறாள் என்பதே தெரியாது... அவனுக்கு ... எங்கிருந்தாலும் வாழட்டுமே...அவன் மனம் வாழ்த்தத் தவறவில்லை ... இங்கே இவள் தொல்லையைத் தாங்க முடியவில்லை என்று சொல்லியும் - தொடர்வேன் என்று நிற்கின்றாள்.

அறுக்கமுனைகின்றான் அவன். அணைக்க முயல்கின்றாள் மலர்.

''என்னிடம் பேசமாட்டீர்களா...?''-மலர்;

''பேச என்ன இருக்கு...''

''எத்தனையோ ருக்கு, மனம் வைத்தால்...''

''என்னிடம் ஒண்டுமில்லை, ஒருமனம்தான் இருக்கு...அ எனக்குத்தேவை,...''

இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

மலரின் முகம் வாடிவிட்டது-மலர்ச்சி குன்றிவிட்டது.

நீண்ட நேரத்தின் பி ...

''ஏன் மலர் முகம் வாடி விட்டது?''

''சூரியன் ஒளியில்லாமல் தாமரை மலரமுடியுமா?''

''மன்னிக்க வேணும்...'' என்றுவிட்டு இருந்தான்.

''ஆனந்...பொன்னைக் கண்டால் நகைசெய்துபோட நினைப்பதுதவறு...பிழையா?'' மலர் அவன் முகத்தைப் பார்த்தபடி கேட்டாள்.

''இல்லை...அதில் என்ன பிழை இருக்கு''- எதையும் யோசியாது எங்கேயோபார்த்தபடி பதில் சொன்னான்.

''நானும் அப்படித்தான் நினைக்கிறன்...'' என்றுவிட்டு பெருமூச்சொன்றை விட்டாள். மலரின் நிலைமைக்காக மனம் வருந்தினான்.

''சரி...என்ன சாப்பிட்டீங்க...?'' மலர்தான் கேட்டாள்.

'பசிக்கவில்லை...''

''ஏன் பசிக்கவில்லை...?''

''தெரியாது...''

''தெரியாத ஒரு பசியா... சரி வீட்டை வாருங்க சாப்பிட ..''

''வேண்டாம்...?'

''நான் தந்தால் சாப்பிடமாட்டீங்களா?''

''என் கொள்கையே வேறு ..''

''பசி இருக்கிறதுதான் உங்க கொள்கையா?''...

மௌனம்...

''சரி கோயிலுக்காவது போய் வாங்க...மன நிம்மதி வரும்...''

''மனத்தூய்மையும் உடல் தூய்மையும் இருக்கும்போது கோயில் ஏன்?''

''தூய்மையில்லாதவங்களுக்கு மட்டுமா கோயில்...''

''அவங்கதான் போக வேணும்?''

''அவங்க போகமாட்டாங்க...''

''அப்ப யார்போவாங்க...''

''தூய்மையானவங்க மட்டுந்தான் போவாங்க...அவங்களைத்தான் கடவுள் ஏற்பார்...''

''அங்கை அவனுக்கு என்ன வேலை...''

''அவனுடைதான் கடவுள் கதைப்பார்...''

''அவரிட்டை எனக்கென்ன கதை...''

''நிம்மதி அவரிட்டை இருக்கு...''

''அதை வேண்டவா?...

''ஓம்...கேட்டால் தருவார் ... உங்களைப்போல அல்ல...''

''என்னோடை கதைக்க விரும்பினால் இங்கை வரலாமே...''

''வந்தவர்களோடு கதைக்கிறீங்களா மனம்விட்டு...''

''நான் கடவுளைத் தேடு என்கிறன்...''

''நான் நல்ல மனிதரைத் தேடுறன்...''

''ஏன்...?''

''அப்போதுதான் நி[ம்ம]தி வரும்...'

இருவரும் நீண்ட மௌனம். ஆனந்தனின் மனதை மாற்ற எடுத்த முயற்சி அத்தனையும் தோல்விதான் கண்டது.

மௌனத்தை இருவரும் கலைக்கவில்லை...

## [2]

மாலை நேரம்... மங்கிய பொழுது—

''ஆனந்தா...''

ஒரு குரலைக் கேட்டு எழும்பினான். குரலில் கடுமை இருந்தது. எழும்பிவந்தான். இன்று முழுக்கப்பட்டினி. தளர்ந்த உடல்-மனமும்கூட... வந்தவர்களைக் கண்டதும் அவன் மனம் துவண்டது என்று கூறமுடியாது... முகத்தை, நெஞ்சை சுண்டியது...

பட்டுப்போன வாழ்வு... விட்டுப்போன உறவு...

-இவை ஆனந்தனின் மனதில் உதித்த ஒரு நிலைத்தள்... இதுவரை எத்தனையோ செய்து ப[illegible] விட்ட[illegible]கள் - தே[illegible] டார்கள். அடுத்து [illegible]றுவது எடுத்த. காரியத்தை எப்படியும் முடிக்கும் எண்ணமா?... இதனால்தான் அடுத்தடுத்து தொல்லைகளைத்தந்து கொண்டிருக்கின்றார்களா? முன்பு தனித்துத் தந்தார்கள்...இன்று சட்டத்தரணி, விதானையோடு தரும் தொல்லை... எதற்கும் ஓர் எல்லை வேண்டாம். ஆனந்தன் மனதில் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நினைவலைகள் தாம் இவைகள். எதற்கும் எல்லை இருந்தால் பிரச்னைகள் [illegible] உலகமாகிவிடும். [illegible]ல்தான் எல்லை இல்லாத தொல்லைதர எல்லையற்ற கும்பல்கள் உருவானார்களோ?... அவர் பெரியவர்தான்-ஊருக்கும் பெரியவர்தான் ஒரு காலத்தில அவரு ஏழை -இதை மறக்கலாமா?

நான் படித்து முன்னேற அவர் காரணமாக இருந்தார் என்பதற்காக என் வாழ்க்கை அவருக்குச் சொந்தமல்ல... என் உணர்ச்சிகள் அவருக்கு அடிமையல்ல—அவர் பணம் உதவியது உண்மைதான்- நான் மறுக்கவில்லை. அதற்காக அவர் இட்ட வட்டத்தில் நின்று ஆடவேண்டுமென்பது சட்டமா?'' -என்று ஆனந்தன் மனம் தனக்குள்ளேயே பேசிக்கொண்டது. அதை யார் அறிவர்?

''என்ன எனக்கு அடங்கின பிள்ளையாக இருக்கப்போறியோ இல்லையோ, இல்லை அடம்பிடிக்கப்போறியோ?'' - பெரியவர் சத்தம்போட்டுக் கேட்டார்.

ஆனந்தன் எதையோ சொல்லத்தான் [illegible] ஆனால், பெரியவருக்கு ஆனந்தன் தன்னை எதிர்த்துப்பேசப் போகிறான் என்பது தெரிந்துவிட்டது. அவனைக் கதைக்க விட்டால் ஆபத்து என்பதை உணராதவரல்ல பெரியவர். குதிரையைத் தட்டிவிட்டால் வேகமாகப் பாயும்-பசுவைத் தடவிக்கொடுத்தால் பாலைத் தரும் என்பது அவருக்குத் தெரியாததல்ல. எங்கே தடவவேண்டும் என்பதும் தெரிந்தவர். ஆனந்தனுடை எப்படிக் கதைக்கவேண்டு மன்று தெரியாமலா போகு .

'கதைக்கக் கதைக்காதை- நான் சொன்னபடி [illegible] போறியோ இல்லையோ?''

பெட்டிப்பாம்பைத் தட்டிவிட்டால் என்ன செய்யும்...

''முடியாது...'' - வேகமாக ஆனந்தன் சொன்னான்.

''சீ...நாயே என்ரை காசிலை படிச்சுப்போட்டு எனக்குமேலை ஏறி நிற்கிறாய்...'' - சீறினார் பெரியவர்,

ஆனந்தன் மௌனம் சாதித்தான்.

''உன்னைக் காற்சட்டை போடவைச்சது நான்... இதை மறந்திட்டாய்...இல்லை...நான் எண்டது என்ரை பணம்... இதை மறந்திடாதை...''

உண்மைதானே ... ஆனந்தனால் கதைக்கமுடியவில்லை.

''ஏன் தம்பி ஆனந்தா... இதென்ன சின்னப்பிள்ளை மாதிரி—பெரியவர் உனக்கு நல்லதை [illegible] வைப்பார்...'' - விதானையார் கற்பூரம் [illegible]னார்.

''இல்லை, உனக்கு விருப்பமில்லையெண்டால்...பெரியவர் உனக்குச் செலவழிச்ச காசைத் திருப்பிக்குடுத்துப் போடு... ஒருத்தற்றை காசை நீ வைச்சிருக்கிறது நல்லாயில்லைத் தானே...'' - சட்டத்தரணி ஆராத்தி எடுத்தார்.

''கடன்பட்டால் குடுக்கத் தானேவேணும்...'- ஆனந்தன் மெதுவாகச்சொன்னான்.

''எப்ப குடுக்கப்போறாய்'' - விதானையார் சட்டெனக் கேட்டார்.

''எப்பிடிக் குடுக்கப் போறாய்?'' - சட்டத்தரணி வெடுக்கெனக் கேட்டார்.

''அதைத்தான் யோசிக்கிறேன்...''

'' [illegible] உன் [illegible] காணியை எழு[illegible]''

[illegible] வார்த்தைபோல் இ[illegible] ஆனந்தன் மனம்கொதித்துத்தான் என்ன செய்யமுடியும், பணம் பெரியவருடையது. அவரிடம் அதிகம் இருந்தது. ஆனந்தனிடம் இல்லாமை- வறுமை- அதிலும் இயலாமை குடிகொண்டது. அவன் வாத்தையை நம்பி வேறு யார் கடன்கொடுப்பர்,

இருக்குமட்டும்தாய் இருந்துவிட்டாள் தானே. அது போதும். இந்தத் தனிமரம் எங்கே நின்றால்தான் என்ன? தனிமரம் தனிமரம்தானே. அவன் மனம் துணிவுகொண்டது. ஆனால் அவன் மனம் அ[illegible] அறியாது அழுதது [illegible] [illegible]'' தோதி[illegible] [illegible].

வந்தவர்கள் வென்றுவிட்டார்கள்.

மறு நாட்காலை வீட்டை விட்டுப் புறப்படவேண்டும்...

இரவு...

வாழ்க்கையில் அவன்கண்ட மிச்சம் என்ன? 'ஒன்றும் இல்லை.

நல்லவன் என்ற பெயரும் எத்தனை நாளைக்கு நிலைத்து நிற்கும்-பொல்லாத உலகம் இது.

நேற்றுவரை நல்லவர்கள் என்று சொன்னவர்கள் இன்று கெட்டவர்கள் என்று சொல்வதைக் கண்டுகொண்டு தானே இருக்கின்றோம். ஏன்? நேரத்துக்கு நேரம் தங்கள் முடிவை மாற்றிக் கொள்கின்றார்கள். அதைத் தங்களுக்குச் சாதகமாகவே பயன்படுத்திக்கொண்டு பழக்கப் பட்டு விட்டார்கள்.

வாழ்க்கையில நல்லவன் என்று போற்றியும்—உன்னைப் போல் ஒருவனை கண்டதில்லை என்பர் சிலர்—கெட்டவன் என்று தூற்றுவதும் அவர்களே. ஆளுக்கொரு கொள்கை நேரமொரு வேஷம். இது மனிதசமுதாயத்தின் தொற்று நோய்... ஒரு வியாதி...

குடிக்காபல், கும்மாளம் போடாமல் கண்ட கண்ட பெண்களுடன் சுற்றி—கூடித் திரியாமல் இருந்த அவனுக்கு என்ன கிடைத்துவிட்டது? இதைத்தான் எண்ணிப் பார்த்தான்.

வாழ்ந்தால் நல்லவன்.

[illegible] பழைய பாடம்...: படிக்க வேண்டியது புதிய பாடங்கள்...

ம[illegible]...

காலைவரை கவலையை மறக்கக் குடித்தான்...

குடித்தான்... வெறி... படுத்தான்!.

படுக்கையில் தன்மனக் குமையலை... குமுறலை... அத்தனையையும் கொட்டினான்... இதனைக்கேட்க பக்கத்தில் யாருமில்லை...

ஆனால், இதனை மலர் கண்காணிக்கத் தவறவில்லை...

விடிந்தது...காலை...

அவனால் எழும்பமுடியவில்லை.

மலர்தான் எழுப்பினாள்.

அவள் உள்ளத்தில் [illegible] எண்ணங்கள் பல.

அதை அவளால் சொல்ல முடியவில்லை... அவ்வளவுதான்...

இதனால்தான் எழுப்பினாளோ?...

ஆடவனை எழுப்புவதென்றால்...

ஆனால், அவள்தான் எழுப்பினாள்,

எழுப்பியவள் உள்ளத்தில் [illegible]ணர்ச்சிகள் பல...

எழும்பியவன் உள்ளத்தில் கொப்பளித்த துயரங்கள் பல...

எழுப்பியள் கன்னம் கதும்பி—சிவந்திருந்தது— அது நாணத்தின் அறிகுறி.

எழும்பியவன் உள்ளம் வெதும்பி இருந்தது— அது வேதனையின் அறிகுறி.

இன்றுடன் அந்த வீட்டிற்குப் பிரியாவிடை வைக்கின்றான்.

அதைப்பிரிய மனம் இல்லை. ஆனால் பிரிந்துதானாக வேண்டும். இது மாற்ற முடியாத நிபந்தனையாகின்றது. இதைத் தவிர வேறு பாதை அனுக்த இல்லை.

அதைமட்டுமாபிரிகின்றான்... உற்றார்— உறவினர்— அன்பிக்குரியவர்— மதிப்புக்குரியவர்கள்... இவர்களையும் பிரிகிறான்...

புரிந்துதானாகவேண்டும் அவன்பட்ட தொல்லைகள் அந்த முடிவைத் தந்தது

இங்கிருந்து வாழ்வதைவிட எங்கேயோ தனித்து வாழ்வதை விரும்ப முனைந்தான்...

தனிமரமானால்தொல்லைகள் வராமலா இருக்கும்!

மலர்...

பாவம்...

ஆனந்தன் புறப்படஆயத்தமானான்.

''எங்கை... ஆனந்தா?...'' என்றபடி பண்டிதர் வந்தார். கண்டதும் கட்டிப் பிடித்து அழுதான். அதைத்தவிரவேறு என்ன செய்யமுடியும். துயர நேரத்தில் யாரைக்கண்டாலும் அழுது தீர்ப்பதுதானே மனிதனுடையதன்மை அழுதுவிட்டால் துன்பம் அகன்றுவிடுமென்ற ஒரு அசட்டு நம்பிக்கை. அவ்வளவுதான்.

''எதற்கும் தாய் என்று ஒருத்தி இருக்க வேணும்''... அழுதபடி சொன்னான் ஆனந்தன்.

பெத்த தாயைத்தவிர வேறு யார் அன்பு செலுத்துவார். அப்படிச் செலுத்தினாலும்அது போலிப்பாசமாகவே இருக்க வேண்டும்.

''தாய்க்குப் பின் தாரமும் ஒண்டு இருக்க வேண்டும்''... [ப]ண்டிதா பொருளோடுசொன்னார்.

''நீங்கள் என்ன சொல்லுகிறீங்கள்...''

''நீ ஓமெண்டால் சொல்லு ...மலரை...''

''அந்த மலருக்கு உகந்தவன் நானல்ல...''

( ம் பக்கம் பார்க்க)


இப்பொழுது வாங்கலாம்



பிரவுண்சனின் இன்னுமோர் தரமான தயாரிப்பு
பிரவுண்சன் அரறூட்மா

குழந்தைகள் வயோதிபர்கள் நோயுற்றிருக்கும் போது டாக்டர் அரறூட் கஞ்சி அருந்தும் படி சிபாரிசு செய்தாலும், தேகாரோக்கிய உணவு வகை தயாரிப்பதற்கு வேண்டி, நீங்கள் அரறூட்மா வாங்கினாலும் நீங்கள் வாங்குவது உண்மையான 100% அரறூட்மா என்பதை உறுதிப்படுத்த பிரவுண்சன் அரறூட் மாவை தேர்ந்தெடுங்கள்

Brownson

இறக்குமதிசெய்து விநியோகிப்பவர்கள்:
பிரவுண்சன் இன்டஸ்ரீஸ்
80 1/4 பிறைஸ் பிளேஸ் கொழும்பு 12 தொலைபேசி: 27197

பிரவுண்சன் அரறூட் அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.




Ariyaratne v eyangoda

## ஆவிகளுடன் என் அனுபவங்கள்.

# நோய்களைக் குணமாக்கிய விதம்!

(சென்ற வாரத்தொடர்ச்சி)

முன் கூறிய தோழன் தன் சொந்த வாழ்க்கை பற்றியும் ஒரு கேள்விகேட்டான். திருமணமாகி நான்கு ஆண்டுகள் ஆகியும் தனக்கு குழந்தை இல்லையே என்று ஏக்கம் தெரிவித்தான். உமக்கு விரைவில் குழந்தை பிராப்தம் உண்டு. பெண்குழந்தை பிறக்கும் என்று பதில் கிடைத்தது. இக்கேள்வியைக் கேட்ட ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 25-9-76 அன்று அந்தத் தோழன் எனக்கு இனிப்பு வழங்கினான். ஆவிகள் சொன்னதுபோல அவன் மனைவிக்குப் பெண்குழந்தை பிறந்துள்ளது என்று அறிவித்தான். அவனைவிட நான்தான் பெரிதும் மகிழ்ந்தேன்.

### நோய்களை குணமாக்கினர்

நோயாளிகளைப்பல சந்தர்ப்பங்களில் பல முறைகளால் குணமாக்கியுள்ளனர் ஆவிகள். பக்கத்து ஊரைச் சேர்ந்த பழனிசாமி முதலியார் எம்.ஏ. என்பவரின் மனைவிக்காக ஒரு முறை விபூதி அளித்தனர். அவருக்கு கடுமையான மார்பு வலி வருவது உண்டு. இந்த விபூதி உபயோகித்தலில் வலி சிறிது குறைந்து சில நாள் வராது மீண்டும் வந்துவிட்டது. இதை ஆவிகளிடம் எடுத்துக் கூறினோம். ஒரு செப்புத்தகடு கொண்டுவரச் சொல்லி அதில் சக்கரங்களை எழுதிக் கொடுத்தனர். ஒரு வெள்ளி அல்லது ஞாயிறு அன்று அதற்கு கற்பூரம் காட்டி 108 முறை ஓம் நமசிவாய நமஹ என்றுகூறி ஒரு தாயத்தில் இதைப் பொருத்திக் கொள்ளச் சொன்னார்கள் ஆவிகள். பிறகு அந்தப் பெண்மணி தன் தாத்தாவின் ஆவியுடன் பேசவேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். அவரை பேசவைப்பதாக எங்கள் வழிகாட்டும் ஆவிகள் தெரிவித்தனர். ஆனால் கடைசிநிமிடத்தில் உங்கள் தாத்தா வரமறுத்துவிட்டார். இது போன்ற சோதகளில் பங்கு கொள்ள அவர் விரும்பவில்லையாம் என்று பதிலளித்துவிட்டனர். எல்லோருக்கும் ஏமாற்றம். எங்களுக்கோ அவமானம். உடனே அந்தப்பெண்மணி 21-11-73 ஆம் ஆண்டு இறந்துபோன தனது தந்தையுடனாவது பேச முடியுமா என்று கேட்டார். அவர் நன்னிலையில்தான் உள்ளார். கூப்பிட்டுக்கொண்டு வருகிறோம் என்றுகூறிச் சென்றனர் எங்கள் வழிகாட்டும் ஆவிகள். அதே போல சிறிது நேரத்தில் அந்த ஆவியின் தொடர்பும் கிடைத்தது. பேசவந்த ஆவியின் மகள்-மருமகன்- மனைவி- பேரன்-பேத்தி ஆகியோர் அவருடன் அப்போது பேசினர். பேச ஆரம்பித்த உடனே பெண்கள் துக்கத்தினால் அழ ஆரம்பித்து விட்டனர். காரணம் எனது மீடியம் நண்பர் ஜெயசீத்தாராம் மூலம் பேசிய அந்த ஆவியின் பேச்சு அவ்வளவு தெளிவாக இருந்தது. குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். பேச்சு முடிந்த பிறகு எல்லோரும் எங்களைப் பாராட்டினர். வந்து பேசியது தனது தந்தையே தான் என்றும் அதில் தனக்கு சந்தேகமே இல்லையென்றும் கூறி பிரமித்துப் போனார் பழனிசாமி முதலியாரின் மனைவி திருமதி பானுமதி.

### மனைவிக்கு ஆறுதல் கூறிய ஆவி

எங்கள் ஊரில் இருந்து 15 மைல் தொலைவில் திண்டிவனம் என்றொரு நகர் உள்ளது. அங்குள்ள தபால் அலுவலகத்தில் அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் சொக்கலிங்கம் என்ற இளைஞர். இவர் கடந்த 26-4-77 அன்று திடீர் மரணம் அடைந்துவிட்டார். சில தினங்கள் கழித்து இவரது குடும்பத்தினர் எங்களை அணுகினர். சொக்கலிங்கத்தின் இளம்மனைவி சிவகாமசுந்தரி தன் கணவரைப்பிரிந்து மிகவும் விரக்தியுற்றிருக்கிறார். தயவு செய்து சொக்கலிங்கத்தின் ஆவியுடன் அவரைப் பேசச்செய்து நீங்கள்தான் ஆறுதல் அளிக்க வேண்டும் என்று வேண்டினர். நாங்களும் அழைப்பை ஏற்றுத் திண்டிவனம் சென்றோம். மரணமடைந்த சொக்கலிங்கம் புண்ணியலோகத்தில் இருந்ததால் உடனே தொடர்பு கிடைத்தது. அங்கே சொக்கலிங்கத்தின் மனைவி- அம்மா- மாமனார்-அண்ணன்- அண்ணிகள் ஆகியோர் சூழ்ந்திருக்கப் பேச்சு நிகழ்ந்தது. சொக்கலிங்கம் தன் மனைவிக்கு சில அறிவுரைகளைக் கூறினார். பல குறைதன் மனைவியைக் 'கண்ணே' என்று அழைத்தார். (நாலுபேர் எதிரில் கூட என்னை அவர் அப்படித்தான் அழைப்பார் என்று கூறிய அவர் மனைவி கதறினார்) பிறகு அனைவரும் குடும்ப விஷயங்களைப்பற்றிப் பேசினர். பேசும் போது அனைவரும் அழுதனர்.

கடைசியில் நாங்கள் விடைபெறும்போது 25 ரூபா தட்சிணையாகக் கொடுத்தனர். எங்களுக்கோ அதிர்ச்சி. அவர்களிடம் பணத்தை வாங்க மறுத்து விட்டு விடைபெற்றோம். பஸ் செலவையாவது எடுத்துக் கொள்ளுங்கள் எனக் கேட்டனர். அதற்கும் நாங்கள் ஒப்புக்கொள்ளாததால் அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமும் எங்களிடம் மரியாதையும் உண்டாக்கியது என்று நினைக்கிறேன். அது அவர்களுடைய செயலில் தெரிந்தது. சொக்கலிங்கத்தின் அண்ணனும், மைத்துனரும் பஸ் நிலையம் வந்து எங்களை வழியனுப்பினர். எல்லோருக்கும் பேச்சு திருப்தியளித்தது. எவ்வளவோ பேர் ஆறுதல் கூறியும் துக்கமாக இருந்த சிவகாமசுந்தரி நாங்கள் விடைபெறும்போது தனக்கு இப்போது துக்கமே இல்லை என்றும் அவரை நேரிலே சந்தித்தது போல் உள்ளது என்றும் மலர்ந்த முகத்துடன் கூறினார். நாங்களும் பரம சந்தோஷத்துடன் வீடுவந்தோம்.

### சில இடங்களில் தோல்வி

இதைப்படிக்கும் வாசகர்கள் பலர் உடனே தங்கள் உறவினர்களுடன் பேச நினைப்பது எனக்குப் புரிகிறது. நாங்கள் எல்லா இடத்திலுமே வெற்றி பெறுவதும் இல்லை. பல இடங்களில் புகழ்க்கொடி நாட்டிய நாங்கள் சில இடங்களில் மூக்குடைபட்டிக்கிறோம். இதை எழுதுவதற்கு நான் வெட்கப்படவில்லை. தோல்விகளை ஒப்புக் கொள்வதும் மிகப் பெரிய தைரியம் என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

சில சம்பவங்களுக்கு ஆவிகள் விளக்கம் சொல்லாமல் மழுப்பிவிடுவதும் உண்டு. ஒரு நாள் இரவு நான் உணவு அருந்திக் கொண்டு இருந்தபோது வீட்டிற்குள் தவறி வந்து விட்ட பெரிய கருநாகம் ஒன்று என்முதுகுக்குப்பின்னால் படம் எடுத்து நின்றது. முருகன் அருளால் அன்று பாம்புக்கடியிலிருந்து தப்பினேன். பிறகு அனைவரும் சேர்ந்து அதை எமலோகம் அனுப்பினோம், ஆனால் ஆவிகளோ அப்பாம்பைக் கொன்றதற்காக மிகவும் சண்டித்தார்கள். வெள்ளிக்கிழமை தினம் அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும் என்றார்கள். அதே போல் அடுத்த வெள்ளிக்கிழமை ஆவிகள் வந்தனர். மீடியம் மயக்க நிலையில் ஆழ்ந்தார். வெகுநேரம் அசைவற்று அமைதியாக இருந்தார். பிறகு மீடியத்தின் வலதுகரம் நீண்டு பாம்பு படமெடுப்பதுபோல நிமிர்ந்து வலப்புறமும் இடப்புறமும் ஆடியது.

### விளக்கம் தராமல்...

பிறகு எதிரே இருந்த விபூதித் தட்டில் மீடியத்தின் கை தொப்பென்று விழுந்து அழுத்தமாகப் பதிந்தது. அந்நிலையில் தட்டு பாம்பு நெளிவதைப்போல வலப்புறமும் இடப்புறமும் சுழன்றது திடீரென்று மீடியத்தின் கை தட்டில் எதையோ மின்னல்வேகத்தில் போராடிப்பிடித்து அழுத்தியது. பிறகு தட்டு இடமும் வலமும் வளைந்து பாம்பைப் போல நகரஆரம்பித்தது. மீடியத்தின் கை அதன் உள்ளேயே இருந்தது. மீடியம் மயக்கநிலையில தட்டு நகரநகர சாய்ந்து கொடுத்தார். ஏறக்குறைய படுக்கை நிலைவரைசாய்ந்தார். பிறகு தட்டிலிருந்து கையை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். பிறகு மீண்டும் ஆவிகள் பேச ஆரம்பித்தனர்.

அந்தப் பாம்பை அடித்தது தவறு. அந்தப் பாம்பின் ஆவி இவ்வீட்டிலேயே சுற்றி வருகிறது அது மனம் நொந்து இப்படி அலைவதால் உங்கள் குடும்பத்திற்குக் கெடுதல் உண்டாகலாம். அதனுடன் நடந்த போராட்டத்தை நீங்களும் தானே பார்த்துக்கொண்டிருந்தீர்கள் என்றனர். தட்டு இப்படியும் அப்படியும் ஆடியதன் காரணம் என்ன என்றுகேட்டதற்கு விளக்கம் சொல்வதற்கில்லை. தட்டிலுள்ளவிபூதியை உடனே தெளிக்க வேண்டும். இதை ஈரத்துணியுடன் பயபக்தியுடன் தெளிக்க வேண்டும். குளித்துவிட்டு மஞ்சள் கலந்த தண்ணீரில் தோய்ந்த ஈர ஆடையை அணிந்துகொண்டு ஒருசெம்பில்தண்ணீர்எடுத்து அதில் இந்த விபூதியைக்கலந்து அதனுடன் ·மஞ்சள் தூளையும் கலந்துகொண்டுஅக்கலவையை பூஜை அறையில் வைத்து இஷ்டதேவதையை வணங்கிவிட்டு மாவிலையால் 'ஓம் சிவார்ப்பணம்' என்று உச்சரித்துக்கொண்டே வீடு முழுவதும் தெளிக்கவேண்டும். பூஜை அறையில் இருந்து ஆரம்பிக்கவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஓம் சிவாப்பணம் என்று சொல்வதை நிறுத்தக்கூடாது. பாம்பு உயிர் விட்ட இடத்தில் நீரை அதிகம் தெளிக்க வேண்டும். உடனே செய்யுங்கள் அவசரம் என்றனர். நானும் உடனே குளித்துவிட்டு அவர்கள் கூறியபடி செய்தேன். பிறகு மீண்டும் வந்த ஆவிகள் ''முறைப்படி செய்தீர்கள்; பெருமைப் படுகிறோம்'' என்றனர். விதிபூதான் தெளித்தாகிவிட்டதே. இப்போதாவது அதைப்பற்றி கூறுங்களேன் என்றேன். இன்றைக்கு வேறெதுவும் வேண்டாம். பிறகுபார்க்கலாமென்று கூறிச்சென்றுவிட்டனர். இது நடந்தது 11-6-76 வெள்ளியன்று.

இதன் பிறகு 10-9-76 வெள்ளியன்று மற்றொரு சம்பவம் நடந்தது. அன்று மதியம் சுமார் 2-30 மணியிருக்கும். தோட்டத்து வாயிற்படி அரு

(9-ம் பக்கம் பார்க்க)

வி. ரவிச்சந்திரன்

---

# ஜயந்தி

பள்ளிச் சிறுபராயமாகத் தாயாதிகள் பின்னால் அயலூராக இருந்த கிராமம் சென்று குடியேறிக் கல்வி பயின்று அரச சேவையில் பணியாற்ற நியமனம் ஏற்று ஊர் விட்டு உற்றம் சுற்றம் பிரிந்து கொழும்பு நோக்கிப்போய்க் கொண்டிருந்த அன்றிரா, பின்னிரவு.

ரயில் பொல்காவலைதரிப்பும் கடந்துவிட்டது. இன்னும் சில மணிநேரத்தில் பொழுது விடிந்துவிடும். கொழும்பு மாவட்ட எல்லைமருவிய ஊர்கள், பசுமை கொழித்த கிராமங்கள் அதன்பின் ரயில் பாதை ஓரமாக இரு மருங்கிலும் தோற்றப்படும். முதல் முறையாக ஊரையும் பெற்றோரையும் உற்றார் உறவினராகப் பழகியவர்களையும் பிரிந்து நெடுந்தூரம் பயணம் போகும் ஒரு வாலிபனை வாட்டும் பிரிவுத்துயர் அந்த இரவு என்னிடமும் குடிகொண்டிருந்ததால் உறக்கம்பிடிக்காமல் ஓரோர் ¦ சமயம் கண்ணயர்வதும் விழிப்பதும் யன்னலூடாக இருள்வெளியைப் பார்த்து நினைவுகளில் ஆழ்ந்து போவதுமாயிருந்தேன். 'தம்பி! நீண்ட இராப்பயணம் மெத்தக் கவனம். இனியும் நீ விளையாட்டுப் பிள்ளையல்ல!'- என்று குரல் தழதழக்கப்பேசி இங்கிதமாக ஒரு வண்டில் சுமையை என் தலைமேல் தூக்கி வைத்து மிக்க மனவேதனையுடனே என்னை வழியனுப்பிய அப்பரின் பேச்சுக்குரல் ஆகாசவாணியின் அசரீரி வாக்காக

அ. செ. மு.

என்னைப் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தது. என்னை கூட என் வண்டில் பொதியுடனே சுமந்த மெயின் லைன் கோச் வண்டித்தொடர் பின்னிரவுக் குளிர்காற்றையும் இருளையும் ஊடுருவிக்கொண்டு விடிவை நோக்கி அதிவேகமாகப் பறந்தோடியது. மீரிகமை ஊரை அடுத்து எங்கேயோ புதுநாள் விடிதற்கான அறிகுறிகள் மெல்லத் தென்படலாயின. நானோ யன்னலோர ஆசனத்தின் மூலைக்குள்ளே சௌகர்யமாகத் தலையைப் புதைத்து மின் விளக்கின் ஒளி கண்களில் குத்தாமல் மறுபக்கம் புறண்டு இமைக்கதவம் மூடிக்கிடக்கிறேன். அந்த விடியற் சாமத்தில் ரயில் தங்கிய நிலையங்களில் ரயிலுக்காகக் காத்திருந்து ரயில் நின்ற மாத்திரத்தே நான் முந்தி நீ முந்தி என்று ஒருவரை ஒருவர் முட்டி மோதி அள்ளித் தள்ளிக் கொண்டு கசமுச என்று இரைந்து திமுதிமு என உள் புகும்பிரயாணிகளால்கதவுகள் திறந்து மூடப்படும் ஓசையும், அவ்விதமாய்உட்புகுந்தபிரயாணிகளில் புருடோத்தமர்களாய்சிறந்த ஆண்கள் அதற்கு மேல்நீட்டி நிமிர்ந்து படுத்துறங்குவோரை தட்டிஎழுப்பி உறங்குவதாகப் பாவனை காட்டிப் பாசாங்கு பண்ணுவோர் காதுக்குள் இரைந்து கூக்குரலிட்டு தம்கூட வந்த பெண்ணாய் பிறந்ததுகளுக்கு உட்கார இடம் 'வென்று'கொடுக்கும் ஆரவாரமும் அவ்வேளை உறக்க அசதியில் ஆழ்ந்து எங்கோ வெகுதூரம் பின் கடந்துபோய்விட்டதொரு கனவுலகில் தன்னிஷ்டமாய் தாவிக் குதித்துக்கொண்டிருக்கும் என் புலனுணர்வைக் கடூரமாய்த் தாக்க, 'என்ன கசப்பாகப் பொழுது விடிகி

(9-ம் பக்கம் பார்க்க)

---

## முருகா! நான் ஏது கேட்பேன்?

முருகா, உன் அருள்வேண்டி வரும்போது
ஒளிர்ஞான வேலைக்காண்பேன்!
உருகாத எனதுள்ளம் உனையெண்ண
மெழுகாகும்! எனக்கு நின்வேல்
தருகாவல் பெரிதாகும்; இருளோடும்;
எழில்மேவும்; நீலவண்ணன்
மருகா, நின் அருள் நல்ல நகரத்தில்
அலைமோதும்! உருகிநிற்பேன்,

பக்தர்கள் தொழுவார்கள், பலரங்கு
அழுவார்கள், பாடியாடிப்
பித்தர்க ளாவார்கள், பெருமானுன்
அருள்வேண்டும் அன்பர்கூட்டம்
எத்திக்கும் நிறைந்தேத்தும்; எழும்பக்திப்
புனல்பொங்கும்; விழிநீர்தேங்கி
முத்தாக விழும்; நெஞ்சு பித்தாகும்;
முருகா, நின் அருளில் தோய்வேன்!

மணித்தேரில் குறமாதின் மணவாளன்
உனைக்காண மகிழ்ச்சி பொங்க
அணித்தேயுன் திருக்கோலத் தெழில் கண்டு
அகங்குழையும்; தொழுவேன் அந்தக்
கணத்தேயென் மயிர்க்கால்கள் புளகமுறும்
மெய்சிலிர்க்கும்; பரவசத்தில்
பிணித்தேயிப் . புவிவாழ்வு பெருமையுறச்
செய்வாய்! பின் ஏதுகேட்பேன்?

-க. கணேசலிங்கம்

### கலைத்துறை வல்லுநர் வரிசை - 1

ஈழத்தில் சிற்பக்கலையின் நிலை!

# கலைஞர் ரேவதி குப்புசாமி கொடுக்கும் விளக்கம்

திரு. ரேவதி குப்புசாமி ஆசாரி கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக விக்கிரக சிற்பக்கலையில் ஈடுபாடுடைய கலைஞர். ஆரம்பவயதில் பரமேஸ்வராக் கல்லூரியில் படித்தார். 1939ம் ஆண்டு 4ம் வகுப்பு படித்தவேளை அவருக்கு சர். பொன். இராமநாதன் அவர்களது புலமைப் பரிசில், லண்டன் மட்ரிக்குலேசன் வகுப்பு வரை இலவசக்கல்வி வசதி வழங்கப்பட்டது, ஆனால் அவரது தந்தையாரான நாகலிங்க ஆசாரி அவர்கள் தங்கள் பரம்பரைக் கலைத்தொழிலுக்கு வாரிசு அழிந்து விடுமே என்ற எண்ணத்தில், பாடசாலைப் படிப்புக்கு முற்றுப்புள்ளிவைத்து குலத்தொழிலில் ஈடுபட வைத்தார்.

பின்னர் தந்தையிடமும், அவரது பிரதமசீடரும் மைத்துனருமான இராமகிருஷ்ண ஆசாரி அவர்களிடமும் கலையைப் பயின்றார்.

''மாமா [இராமகிருஷ்ண ஆசாரி] அவர்கள் சிற்பம், ஆகமம் இரண்டிலும் சிறந்த அறிவு எய்தியிருந்தார்'' என்று பெருமையாகக் குறிப்பிடுகிறார் திரு. ரேவதி குப்புசாமி.

''இரண்டுவகையான சிற்பக்கலையில் முதலாவது கட்டட சிற்பக் கலை தான். கோவில் ஒன்று பூரணமாக வேலைபூர்த்தியான பின்னர் தான் விக்கிரக சிற்பவேலை ஆலோசனை தொடங்கலாம். கட்டிட சிற்பம் எளிய விஷயமல்ல. கட்டிடத்திற்கான இடம் தெரிவதிலிருந்துஆரம்பமாவது இந்த வேலை. திரு. ரேவதி குப்புசாமி கடந்த 47 வருடங்களாக (வெங்கல) தாமிர விக்கிரக வார்ப்புத் தொழிலில் இருந்துவருகிறார். பேராதனை வளாகத்திலும் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியிலும் பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ள முறையே இராஜஇராஜேஸ்வரி, நடராஜர் திருவுருவங்கள், தவிர குருப்பசிட்டியில் உள்ள விநாயகர், இவர் சமைத்த சிறந்த சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டுகள். கொழும்புத் தொழிற் கண்காட்சியில், பகவான் புத்தர், நடனமாது போன்ற உருவங்களைப் படைத்து பரிசுகளும் சான்றிதழ்களும் பெற்றிருக்கிறார்.

கண்டு கேட்டவர்:
கே. வி. பத்மநாபன்

மேலும் திரு. ரேவதி கூறுவதாவது: சிறந்த முறையில் நடராஜர் விக்கிரகம் செய்வதற்கு இரண்டு வருடங்கள் கூடத்தேவைப்படலாம். தாம் படைத்த (பெரதேனியா) இராஜராஜேஸ்வரி சிற்பத்தை தாம் செய்துமுடிக்க 3 மாதங்கள் செலவிட்டாராம்.

இவை தவிர கோவில் மணி செய்வதும் ஒரு தொழிலாகச் செய்கிறார்கள். இதில் சிற்பச் சிறப்பு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் நிர்மாணிப்பதற்காக தமிழகத்திலிருந்து அழைத்து வரப்பட்ட சிற்ப (பஞ்சகம்மாள) பரம்பரையில் வந்தவர்கள் பின்னர் கன்னாதிட்டியில் தமது குலதெய்வமான ஸ்ரீகாளிதேவிக்கு ஓர் ஆலயம் எழுப்பித்து, அந்தச் சூழலில் குடியேறினார்கள். இவர்கள் மூதாதையர் தென்னிந்தியா சுவாமிமலை, கும்பகோணம் (தஞ்சை மாவட்ட) நாட்டிலிருந்து வந்தவர்கள்.

இன்று நமது அரசின் ஆதரவில்லாத நிலையில் தமது உலோக (பித்தளை முதலியன) தேவைகளுக்கு பழைய சாமான் கடைகளையே நம்பி ஆக்கிய கலைப்பொருட்களையும் விலைப்படுத்த பொதுமக்களையே முற்று முழுதாக எதிர்பார்த்திருக்கும் திரு. ரேவதி, யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலிருந்து பிரிந்து செல்லும் கடைச்சாமி ஒழுங்கையில் ஒரு வேலைப்பட்டறையை நடாத்திவருகிறார்.

இவர் தனக்கு குறிப்பிடக்கூடிய மாணவர்கள் தமது தம்பி குமாரசாமி ஆசாரி உட்பட தமது உறவுப்பிள்ளைகள் இரண்டு மூன்றுபேர்கள் மாத்திரம் தம்முடனிருந்து ஒத்தாசை செய்து வேலையும் பழகிவருவதாகக் கூறினார்.

பல ஆண்டுகளுக்கு முன்பதாகத்தென்னிந்தியசிற்பக்கலை பற்றிய இவரது ஆய்வுக்கட்டுரை இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் தமிழக மாத சஞ்சிகையான 'மஞ்சரி'யிலும் வெளியான விபரத்தை பெருமையுடன் நினைவுகூர்ந்தார், திரு. நாகலிங்கம் ஆசாரி ரேவதி குப்புசாமி ஆசாரி.

"தமிழகத்தில் பூம்புகார் என்ற சிற்பக்கலைக்கூடம் சில ஆண்டுகட்கு முன் அமைக்கப்பட்டது. இதை தமிழ் கட்டட - விக்கிரக சிற்பக் கலைஞர்கள் அரசின் ஊக்குவிப்புடன் சாதித்துள்ளார்கள். இன்றைக்கும் தமிழகத்தில், கட்டட சிற்பக்கலை பயிற்ற மாமல்லபுரத்திலும் விக்கிரக சிற்பக்கலை பயிற்ற சுவாமிமலையிலும் கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டு மாணவர்களுக்கு அரசினால் பயிற்சிக்காலத்தில் மாதாமாதம் உதவி ஊதியமாக ரூபா 40/- அளிக்கப்படுகிறது. இக் காரணங்களினால் அங்கேசிற்பக்கலை சிறப்பாக வளர்ந்திருக்கிறது. தவிர பிரிட்டன், அமெரிக்கா போன்ற தேசங்களில், குடியேறியுள்ள இந்தியர்கள் அமைத்துள்ள இந்து ஆலயங்களுக்காகவும் தென்னிந்திய சிற்பவல்லுனர்கள் அழைத்துச் செல்லப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள்.

''இவ்வகையில், எமது நாட்டு அரசு எவ்வித ஊக்கமோ, உற்சாகமோ அளிக்காததால், சில ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கிவந்த ஒன்பது பத்து தொழிற்கலைக் கூடங்கள் கூட இப்போது நான்காகக் குறைந்து, அதுவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரமே இயங்குகின்றன, தொழிலும் மிகவும் அருகிவிட்டது''

மேற்கூறியவாறு திராவிட பழம்பெரும் கலையான சிற்பக்கலையின் நிலைபற்றி திரு. ரேவதி குப்புசாமி ஆசாரி கவலையுடன் கூறினார்.

---

### ஞானத்தமிழ் - 41

## பல்லைத் திறந்துவிட்ட பரம்பொருள்

வ. குகசர்மா

இறைவன் முப்புரம் எரித்த கதை திருமுறைகளில் பலஇடங்களில் எடுத்துக் கூறப்படுகிறது. தேவர்களுக்கும் மக்களுக்கும் துன்பம் செய்த அசுரர்கள் வாழ்ந்த ஆகாயத்தில் பறக்கும் வலிமைபெற்றிருந்த மூன்று கோட்டைகளையும் சிவபெருமான் தன் சிரிப்பினால் அழித்தார் என்பதே வரலாறு.

இதனை மிகவும் அழகுபெறவும் தெளிவாகவும் எடுத்துக் கூறுவது திருவுந்தியார் என்னும் திருவாசகப் பகுதி. இறைவன் திரிபுரசங்காரம் செய்வதற்குத் தாம் உதவி செய்யவேண்டும் என நினைத்தார்கள் தேவர்கள். பூமியே தேராகவும், மேருவை வில்லாகவும், அம்பின் அடிப்பாகம் அக்கினியாகவும், சந்திரனை இடையாகவும் திருமாலை நுனியாகவும், காற்று அம்பின் இறக்கைகளாகவும் அமைத்தனர்,

இதனாலே தேவர் மனதிலே கர்வம் உண்டாயது - தங்கள் துணையாலேதான் சிவபெருமான் முப்புரங்களை அழிக்கப் போகிறார் என்று நினைத்தார்கள். இவர்களுடைய எண்ணத்தையெல்லாம் இறைவன் அறிந்தார். அவர்கள் கொண்டுவந்த தேர் மேல் காலைத் தூக்கிவைத்தார். தேரின் அச்சு முறிந்து போய் விட்டது. சிவபெருமானுடைய புன்னகையால் முப்புரங்களும்சாம்பலாயின. ''நான்'' ''எனது'' என்ற அகங்கார மமகாரங்கள் உள்ளவர்கள் சமயநெறியிலே முன்னேறுவது முடியாதசெயல் என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

''தச்சு விடுத்தலும் தாமடி
யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்
தீபற
அழிந்தன முப்புரம்
உந்தீபற''

இருவினையொப்பு மலபரிபாகம் பொருந்திவிட இறைவன் ஆசானாக வந்து திருவடி தீக்கை செய்யவும், பிறவியொழிந்தது, மும்மலங்களும் அழிந்தன என்னும் ஒரு பொருளும் பெறப்படுகின்றது. அவ்வாறு பொருள்கொள்ளும் இடத்து உடம்புதேரெனவும் திருவடியிடுதல் தீட்கை எனவும், அச்சு ஊழ் எனவும் முப்புரம் மும்மலங்கள் எனவும் கொள்ளப்படும். ''முப்புரம் என்பது மும்மல காரியம்'' என்னும் திருமூலர் வாக்கும் இங்கு நோக்கத்தக்கது.

இந்தச் செயலை மற்றோர் புலவர் இறைவனைப் பழிப்பதுபோன்று நிந்தாஸ்துதியாக மிக அழகுபெற எடுத்துக் காட்டுகிறார். பிறரிடத்திலே போய் இரந்து நிற்கும்போது ''பல்லைக்காட்டி'' நிற்றல் என உலகவழக்கில் கூறப்படுகிறது.

''யெம்பாவ - நிற்காட்டி
லொழிப்பவர் யார்
நீயருள்க
யெமக்கென்று - பற்காட்டி
நிற்பனபோல்
மலர்ந்தன மென்பனி
முல்லை''

என்பது திருவாதவூர்ப் புராணம்.

சிவபெருமான் வில்லு, அம்பு, தேர் யாவும் இருந்தும் முப்புரங்களுக்கு மேல் தேரிலே சென்று வில்லை வளைத்து அம்பை எய்யவில்லை. அது இறைவனால் இயலாத செயல் எனவே ஆற்றாமல் இறுதியில் பல்லைத் திறந்துவிட்டார் என்று அப்புலவர் கூறுகிறார். அத்துடன் இதுதானோ உனது படைத்தொழிலின் வலிமை என்றும் கேட்கிறார். சிரிப்பால் எரிக்க முடியுமானால் முன்பே எரித்திருக்கலாமே. ஏன் வீணாக புயங்கள் நோவ மேருமலையை வில்லாக வளைக்கவேண்டும் என்று குமரகுருபரர் ஓர் செய்யுளில் இறைவனை நோக்கிக் கேட்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. புலவரின் செய்யுளை இங்கு பார்ப்போம்.

சொல்லுக் கினிய
கழுக்குன்ற ரேயுமைச்
சொல்லவென்றால்
அல்லற் பிழைப்புப்
பிழைத்துவிட் டீர் முப்பு
ராதியர் மேல்
வில்லைக் குனித்தெய்ய
மாட்டாமல் நீரந்த
வேலை தனிற்
பல்லைத்திறந்து விட் டீரிது
வோ நும் படைத்
தொழிலே''

---

# இங்கிலாந்தில் ஒரு பயங்கரவாதிகள் இயக்கம்!

தேசிய முன்னணி என்ற ஓர் இயக்கம் இங்கிலாந்தில் இப்பொழுது பரவலாகவே செயல்பட்டு வருகின்றது. இதன் தேசிய தலைவர் டைன்டால் என்பவர், 'மீன்காம்ஃப்' என்பதுதான் தமது கோட்பாடு என்கிறார். 'மீன் காம்ஃப்' என்பது நாஜிகளின் பைபிள் என்று கருதப்படும்.

தங்கள் இயக்கம் ஒரு சாதாரண அரசியல் இயக்கம்தான் என்று கூறிக்கொள்ளும் இவர்கள்ஏன் நாஜிகளின்கொள்கைதான் எங்கள் கோட்பாடு என்கிறார்கள் என்பது விசித்திரமாகவிருக்கிறது. 'எமது இயக்கத்தை நாடுமுழுவதும் நிலைகொள்ளச் செய்வதற்காக இப்பொழுது முயற்சி எடுத்து வருகிறோம். ஜெர்மனியை ஹிட்லர் நிமிர்ந்து நடமாடச் செய்ததுபோல் நாமும் நாட்டிலுள்ள ஏனைய நாஜிகளும் இங்கிலாந்தை அதன் கால்களால் நடமாடச்செய்வோம்' என்று இந்த இயக்கத்தின் அமைப்பாளர் வெப்ஸ்டர் என்பவர் அறிவித்திருக்கிறார்.

வன்முறைக்குத் தாங்கள்எதிரானவர்கள் என்று இந்த இயக்கத்தினர் கூறுகிறார்கள். அவ்வாறாயின் ''எமது உறுப்பினர்கள்தாக்கப்படாவிட்டால் ஒழுக்கம் மீறியவர்களாவார்கள். அவர்கள் தாக்கப்பட்டால் மேலும் பலமடைவார்கள். வலியவர்கள் மத்தியிலிருந்து பலவீனர்களை அப்புறப்படுத்த நாம் விரும்புகிறோம்'' என்று வெப்ஸ்டர் கூறியிருக்கிறாரே! இது ஏன்?

ஜனநாயகத்தை ஆதரிப்பவர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள். அவ்வாறாயின்; ''நாம் தேர்தலைநடத்துவோம், ஆனால் எட்டு அல்லது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான், அதன் பின்னர் மக்களிடம் சென்று தொடர்ந்து ஆளவேண்டுமா என்று கேட்போம். சர்வாதிகாரம்தான் எப்பொழுதுமே நல்லது'' என்று அவர்கள் கூறுவது ஏன்?

''நாம் பதவிக்கு வந்தால் எமது எதிரிகள் யாவரும் இலையான்களைப்போலஒழித்துக்கட்டப்படுவார்கள். எங்களுக்கெதிரான சட்டங்கள் இன்னும் பலப்படுத்தப்படுமானால் நாம் பிரசுரங்களை விநியோகிப்பதைவிடுத்து துப்பாக்கிகளை விநியோகிக்கவரும்'' என்றுபிரசாரம்செய்கிறார்கள்.

பிரிட்டனில் கறுப்பர்களின் தொகை அளவுக்குமிஞ்சிவிட்டது என்கிறார்கள். ஆனால் 1961-ம்ஆண்டுக்குப்பிறகு அதிகமானவர்கள் நாட்டைவிட்டுச் சென்றுள்ளார்களேதவிர நாட்டுக்குள் வந்தவர்களின் எண்ணிக்கை குறைவு. 1970க்கும் 1975-ம் ஆண்டுக்குமிடையில் 1,215,600 மக்கள் பிரிட்டனுக்குள் வந்திருக்கிறார்கள். 1,509,400பேர் நாட்டைவிட்டுப்போயிருக்கிறார்கள். பிரிட்டனிலுள்ள 100 வெள்ளையர்களுக்கு 3 கறுப்புமக்கள் வீதமே இருக்கிறார்கள். நாட்டின் பெரும்பகுதிகளில் கறுப்பர்களே இல்லை.

வெள்ளைப் பெற்றோருக்குப் பிறக்கும் 88 பிள்ளைகளுக்கு 2 பிள்ளைகள் ஆசியாக்காரர்களுக்கும் ஒரு பிள்ளை மேற்கிந்தியப்பெற்றோருக்கும் பிறக்கிறார்கள். 2000-வது ஆண்டில் கறுப்பு இனத்தவர் அதிகரிப்பு நின்றுவிடும்போது 100 வெள்ளையருக்கு 5 கறுப்பர் வீதமே நாட்டில் இருப்பார்கள்.

கறுப்பர்கள் வெள்ளையர்களின் தொழில்களை அபகரித்து விடுகிறார்களென்று தேசிய முன்னணி பிரசாரம்செய்கிறது. ஆனால் 1932-ம் ஆண்டில் கறுப்பர்களே இல்லாத சமயம் 30 லட்சம் பேர் வேலையில்லாமலிருந்தார்களே: ஏன்?

[9-ம் பக்கம் பார்க்க]

# ஒப்பந்தங்கள் மூலம் ஆயுத பரிகரணம் ஏற்பட முடியாது

1945-ம் ஆண்டு ஒக்டோர் மாதம் 24-ந் திகதி தொடங்கி பல சிக்கல்களிடையே நிலவி வரும் உலக சமாதானம தொடர்ந்து நீடிக்குமா? மனித இனம் அழியாது காப்பாற்றப்படுமா என்ற பீதி உலக நாடுகளிடையே இன்று ஏற்பட்டுள்ளது. பெரும் வல்லரசுகள் கங்கணம் கட்டிக்கொண்டு நாளுக்குநாள் உற்பத்தி செய்யும் அணு ஆயுதங்களே இப்பீதிக்குக காரணமாகும். இந்தக் காரணத்தாலேயே மிக அண்மையில் ஐக்கிய நாடுகள்சபையினுல் விசேஷ கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. இங்கு கூடிய வளர்ச்சியடைந்த நாடுகளும், வளர்முக நாடுகளும் ஆயுத பரிஹரணத்தின் அவசியத்தை மிக அழகான சொற்களால்ஆணித்தரமாக வற்புறுத்தின. ஆனுல் பெரும்வல்லரசுகளான ஐக்கிய அமெரிக்காவும், ருஷ்யாவும் இவ்விசேஷ கூட்டத்தின் நோக்கத்தில் அதிக சிரத்தை கொண்டவர்களாகக் காணப்படவில்லை இந்த இரு நாடுகளும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விசேஷக்கூட்டத்தை ஒருவரை ஒருவர் தாக்கவே பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை நாம் அங்கு நடந்த பேச்சுவார்த்தைகளிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

## பரஸ்பரக் குற்றச்சாட்டு

ருஷ்யாவை ஒரு பயங்கர நாடாக உலக நாடுகளுக்கு எப்பொழுதும் எடுத்துக்காட்டும் அமெரிக்காதான் உலகை மிலேச்சத்தனத்தின் எல்லைக்குக்கொண்டுவரக்கூடிய மிகப் பயங்கர நியூட்டோன் குண்டுகளை உற்பத்திசெய்ய முயலுகின்றது என ருஷ்ய வெளிநாட்டு மந்திரி அமெரிக்காவை வன்மையாகக் கண்டித்துள்ளார். ருஷ்யா தாங்கிகளையும் 520 போன்ற குண்டுகளையும் உற்பத்திசெய்து சில வளர்முக நாடுகளின்அபிவிருத்திக்கு

## வல்லரசுகளின் மனமாற்றமே முக்கியம்!

உதவும்போர்வையில் அவர்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு அவர்களுக்கு ஏராளம் போர்க்கருவிகளைக் கொடுத்து உலக சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கின்றது என அமெரிக்காவின் அரசியல்வாதிகள் கூறுகின்றனர். சீனவும் ருஷ்யாவைத்தான்வன்மையாகக் கண்டிக்கின்றது. எனவே இருநாடுகளும்ஒருவரை ஒருவர் தாக்குவதில் கவனம் செலுத்தினரேயொழிய உண்மையாக ஆயுத பரிஹரணத்தைச் செயற்படுத்துவதில் அக்கறை காட்டுபவர்களாக இல்லை. இது மிகவும் வருந்தக்கூடிய விஷயமாகும்.

ஐ. நா. சபையின் விசேஷ கூட்டத்தில் பங்குபற்றிய பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இலங்கைபோன்ற நாடுகள் ஆயுதபரிஹரணத்தைச்செயல்படுததுவதற்கான நல்ல ஆலோசனைகளை வழங்கியுள்ளன. இவற்றை ருஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசுகள்செவிமடுக்குமா?

### ஒப்பந்தங்களினுல் என்ன பயன்?

இரண்டாம் உலகப்போர் நிறுத்தப்பட்டகாலம்தொடங்கியே ஆயுத பரிஹரணம் வலியுறுத்தப்பட்டுவருகின்றது. ஒப்பந்தங்கள் ஆயுதபரிஹரணத்திற்காக கைச்சாத்திடப்பட்டன. ஜெனிவா சமாதியை ஆக்கபூர்வமான செயல்களுக்குப்பயன்படுத்துவதற்கான மகாநாடு நடத்தப்பட்டது. இந்து சமுத்திரம் சமாதானப்பிரதேசமாகப் பிரகடனமாக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. விஷ குண்டுகள் பரீட்சிப்பதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் 1970-ம் ஆண்டு ஆயுத பரிஹரண ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இவையனைத்தும் செய்யப்பட்ட பொழுதும் நாம் காண்பது யாது? அணுஆயுத உற்பத்தி பெருகிக்கொண்டே போகின்றது. வருடம் 40,000 டொலர்களுக்குமேல் பெரும் வல்லரசுகளால் போர்க் கருவிகளுக்குச் செலவிடப்படுகின்றது. ஆனுல் உலகின் சனத்தொகையின் அரைப்பங்கினர் உண்ண உணவின்றி வாடுகின்றனர். இவர்களின் துன்பத்தை நீக்க வல்லரசுகள்விரும்பவில்லை. அப்படி அவர்கள் துயர் துடைக்க முன்வந்தாலும், அந்நாட்டு மக்கள் அவர்களின் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டு அவர்களின் போர்க் கருவிகளைத் தான் அதிகம் பெறவேண்டிய நிலை ஏற்படுவதை நாம் அறிகின்ருேம்

ஆயுத பரிஹரணத்தை ஒப்பந்தங்கள்மூலமோ, பேச்சுவார்த்தைகள்மூலமோ செயற்படுத்தமுடியாது. அதனை உற்பத்திசெய்வதில்தீவிரவேட்கை கொண்டுள்ள பெரும் வல்லரசுகளின் மனமாற்றத்தினுல் தான் அது ஏற்படமுடியும். எனவே ஐக்கிய அமெரிக்காவும் ருஷ்யாவும் தாமாகவே முன்வந்து ஆயுத பரிஹரணத்தைச் செயலளவில் காட்டும் பொழுதே உலகம் சமாதானத்துடன் வாழலாம். அப்பொழுதே மனித இனம் அழியாது காப்பாற்றப்படும். உலகில் நிரந்தர சமாதானப் நிலவ வழி பிறக்கும்.

**செல்வி. ந. குழந்தைவேலு**

---

# திரைகடல்

தற்போது எமது நாட்டில் தமிழ்ப படங்களுக்குப் பெருத்த தட்டுப்பாடு நிலவுகிறது. தென்னிந்தியத் தமிழ்ப் படங்களைத்தான் சொல்கிறேன்; எமது ஈழத்துத் தமிழ்ப் படங்களையல்ல. அவை, அபூர்வமாகத் தயாரித்து வெளியிடப்பட்டாலும் இரண்டு வாரங்களில் டப்பாவுக்குள் பதுங்கி விடுகின்றனவே! நான் இங்கு குறிப்பிடுவது புதிய தமிழ்ப்படங்கள் தற்போது எமது அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் கைவசம் இல்லாமையையே! புதிய படங்களில்லாமையினுல் பழைய படங்கள்தான் (விசேடமாக எம். ஜி. ஆர். - சிவாஜியின் படங்கள்) தியேட்டர்களில் ஆதிக்கம் செலுத்தும். அண்மையில் யாழ். நகரில் திரையிடப்பட்ட ''அக்பர்'' என்ற படம்சுமார் எழுபத்தி ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் வசூலாகியிருந்தது என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத் திறமைக்குச்சான்ருகத் தற்போது தமிழ்படங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தைக் குறிப்பிடலாம். திரைப்படக் கூட்டுததாபனம் அமைக்கப்பட்டபோது சில சில லட்சியங்களையும் கொள்கைகளையும் முன்வைத்துச் செயல்பட்டது. அதில் புதிய தமிழ்ப் படமொன்று இலங்கையில் திரையிடப்பட்டால் அவற்றில் 'மூன்றே மூன்று' பிரதிகள் மட்டுமே மூன்று தியேட்டர்டர்களில் ஓடிக்கொண்டிருக்க வேண்டும் என்பதும் ஒன்று. இதன் நோக்கம், சிங்களப் படங்களும் கணிசமான தியேட்டர்களில் காண்பிக்கப்பட வேண்டும் என்பதாகும். அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் பட விநியோகத்தை கையேற்க முன்பு இலங்கையில் செயல்பட்ட தனியார் நிறுவனங்களான சினிமாஸ்லிமிட்டெட், சிலோன் லிமிட்டெட், சிலோன் எண்டர்டைன்மென்ஸ் லிமிட்டெட் ஆகியவை தாங்கள் வெளியிடும் புதிய தமிழ்ப்படங்களில் சுமார் பதினைந்து பிரதிகளுக்கு மேல் 'பிரிண்ட்' செய்து ஒரேநேரத்தில் திரையிட்டார்கள் கொழும்பில் மூன்று தியேட்டர்களிலும் யாழ்நகரில் இரண்டு தியேட்டர்களிலும் கூடத் திரையிட்டார்கள். இதனுல் சிங்களப் படங்களுக்குத் தியேட்டர் பஞ்சம் ஏற்பட்டது. இதனை முறியடிக்கவே திரைப்படக் கூட்டுத்தாபனம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. ஆனுல் அது தோல்விகண்டது. நோக்கத்திற்கு முரணுகவே அது அமைந்தது- எப்படியெனில், ஒரு படம் ஒரே நேரத்தில் மூன்று தியேட்டரில் தான் ஆனுல் ஒன்றன்பின் ஒன்ருக (மிக வேகமாக) பல புதிய படங்களை வெளியிட்டார்கள். சுமார் பத்துப் புதிய படங்கள் ஒரே நேரத்தில் ஓட ஆரம்பித்தன. கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் பத்துக்கு மேற்பட்ட புதிய படஙகள் ஓட ஆரம்பித்தன. (தனியார் ஆட்சி செலுத்திய காலத்தில் பெரும்பாலும் மூன்று புதிய படங்கள் தான் ஒரே நேரத்தில் வெளியாகின) இதே வேகத்தில் படங்கள் வெளியாகிக் கொண்டிருக்கவே, தற்போது படங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட ஆரம்பித்தது.

அதுமட்டுமல்ல மிகக் குறைந்த விலைக்கு தென்னகத் தமிழ்ப்படங்களைக் கேட்கிருர்களாம். 'உலகம் சுற்றும் வாலிபன்', 'தங்கப்பதக்கம்' போன்ற வெற்றிப்படங்கள் இலங்கைக்கு வராதோ என்ற நிலைகூட இருந்ததே! காரணம் இந்தப் ''பேரமே!'' ஆனுல் மிகக்குறைந்த விலைக்கு வாங்கப்படும் இந்தப் படங்கள் இலட்சம் இலட்சமாக அள்ளிக்கொடுத்தன. ஒரு திரையரங்கிலேயே நான்கு இலட்சம ரூபாய்க்குமேல் ஓடிய படமும் உண்டு. இது என்ன நியாயம்! ஹாலிவூட் நிறுவனத்தினர் திரைப்படக் கூட்டுத தாபனத்திற்குப் படங்கள் விற்கவே மறுத்துவிட்டார்கள்.

இருப்பினும் கொழுத்த லாபம் சம்பாதிக்கும் கூட்டுத் தாபனத்தில் அளவுக்கதிகமான ஊழியர்கள் பணியாற்றுகிருர்களாம். அதுவும் கூட்டுத் தாபனத்திற்கு ஒருவகையில் நட்டமே!

தமிழ்த் திரைப்படங்களுக்குத் தட்டுப்பாடு நிலவிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட சிங்களப்படங்கள் தியேட்டர் இன்றிக் 'கியூ'வில் நிற்கிறதாம். சுமார் ஒன் வருடங்கள்கூடக் காக்க வேண்டுமாம். இப்போது சொல்லுங்கள் சிங்களப்படவுலகத்தின் வளர்ச்சி சாதாரணமானதா? பிரமாதமானதா?

❁

சென்ற வார 'ஈழநாட்'டில் வே. க. தாமோதரம் என்ற வாசகர் எழுதியிருந்த கடிதத்தின் சார்பாக இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

எனது கட்டுரையில் குறிப்பிட்ட மூன்ருவது காரணத்தை மீண்டும் வலியுறுத்துகிறேன். அதாவது ''ஒரு குறிப்பிட்ட பாடல் மனத்தில் நிலைத்துவிடும் அளவுக்கு, பல முறை கேட்டுக் கேட்டுக் கிரகிப்பதற்கு வானெலியில் போதிய விளம்பரம் அளிக்கப்படுவதில்லை'' என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். 'சிந்தாமணி' படத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். காலம் மாறிவிட்டது. அவசர உலகம் இது. நூற்றுக்கணக்கான படங்கள்; புதிய பாடல்கள். அந்த 'ரஷ்' ஷுக்குள் எமது பாடல்கள், திருப்பித் திருப்பி மீண்டும் மீண்டும் பல முறை ஒலிபரப்பப்படத்தான் வேண்டும். தெருச் சுவரொட்டிகளைக் கவனிக்கவும், ஒரே விளம்பரத்தின் ஒரே மாதிரியான சுவரொட்டிகள் ஒரே இடத்தில் நெருக்கமாக ஒட்டப்பட்டிருக்கும். இதெல்லாம் விளம்பர யுக்தி. வானெலியில் ஆரம்பத்தில் பிடிக்காத பாடல்களெல்லாம் பலமுறை தொடர்ந்து கேட்கப்பட்டதனுல் (விரும்பியோ விரும்பாமலோ) மக்களின் வாய் முணுமுணுத்திருக்கின்றன! வானெலி விளம்பரங்களின் 'சுட்டா சுட்டி......டெல்டா டொபி'' என்ற பாடலும் 'அப்பா தந்தாரே......எனக்கு' என்ற பாடலும் வானெலி நேயர்கள் மனதைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றனவே! என்ன காரணம்? பல முறை மீண்டும், மீண்டும் கேட்டுத் தீர்த்ததுதான்.

--திரையன்.

---

# ரமளான் மாதச் சிறப்பும் அல்குர்ஆனின் பங்கும்

**மௌலவி ஏ. ஸி. றஹ்மதுல்லாஹ்**

ரமளான் மாதம் புனித அல்குர்ஆன் அதிலே இறக்கப்பட்ட மாதமாகும். அது மனிதர்களுக்கு நேர்வழி காட்டியாகவும் நன்மை தீமைகளைப் பிரித்துக் கூறி நேரானவழியை விளக்கிவைக்கும் வேதமுமாகும்—அல்குர்-ஆன்.

புனிதமிக்க இந்த ரமளான் மாதம் உலகில் வாழும் அனைத்து முஸ்லிம்களுக்கும் எண்ணிலடங்காத சிறப்புக்கள் அமைந்த ஒருமாதமாகும். அம்மாதத்தில் சிறப்புக்கும் உயர் தன்மைக்கும் அதில் இறக்கப்பட்ட அல்குர்ஆன் பெரும் பங்கை தன்னகத்தே கொண்டுள்ளது. காரணம் அதனையே முஸ்லிம்கள் தங்கள் வேதநூலாகவும் நேர் வழிகாட்டியாகவும் நன்மை தீமைகளை விளக்கிவைக்கும் விளக்கநூலாகவும் அறிவைத் தேடிப் படிக்கும் அறிவுச்சுரங்கமாகவும் கொள்கின்றனர். அத்தகைய சக்திவாய்ந்த இம்மை மறுமை இரண்டிற்கும் ஈடில்லாத பலன்களை அளிக்கும் ஒரு நூல் இறக்கப்பட்ட அம்மாதத்தை முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கையில் அருட்கொடை நிறைந்த ஒருமாதமாகவும் கொள்கின்றனர்.

இந்நூல் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல உலகில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் நேர் வழிகாட்டும் ஒரு நூல் என்பதே அதை இறக்கிவைத்த அல்லாஹ்வின் கூற்ருகும். ஆகவே உலகப் பொதுமறையான இந்த குர்ஆன் நேர் வழியைத் தேடும் ஒவ்வொரு மனிதருக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. ஆக மனித சமுதாயத்திற்கு வழிகாட்டும் இந்நூல் அதை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே தங்கள் வழிகாட்டியாகவும் அவர்களுக்கு சொந்தமான ஒரு நூலாகவும் கொள்ளமுடியும். அந்த வகையில் முஸ்லிம்கள் அதை தங்கள் பெருமைக்குரிய நூலாகவும் அது இறக்கப்பட்ட இம்மாதத்தை நோன்புபிடிப்பது மூலம் கௌரவிக்கவும் செய்கின்றனர்.

## நோன்பு ஒரு கேடயம்

நோன்பு, மனிதர்களைப் பாவங்களை விட்டும் பாதுகாக்கும் ஒரு கேடயம் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். முஸ்லிம்கள் தங்கள் நோன்பின் காலமாகிய அதிகாலையில் இருந்து அஸ்தமனம் வரை எதையும உண்ணுமல், பருகாமல், எவ்வித இன்பங்களையும்அனுபவிக்காமல, தீய பேச்சுக்களபோசமல், வீண் வேடிக்கைகளில் ஈடுபடாமலிருந்தும் வாழ வேண்டியது அதன் கடமைகளில் சிலவாகும். இவ்வாறு உண்ணல், பருகுதல், இன்பம் பெறல ஆகியவைகளைக் கட்டுபபடுத்தி, அதன் மூலம் தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய சில விடயங்களைப் பழகிக்கொள்ளக்கூடிய பயிற்சியாகவும் அது அமைகிறது.

ஆகவே பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் அஸ்திவாரமாகிய ஆசை எனும் இச்சையை கட்டுப்படுததப் பழகிக் கொள்ளும் ஒரு கருவியாக உள்ள இந் நோன்பு மனிதர்கள் தங்கள் வாழ்வில் பாவங்களின்பால் செல்லாமல் தடைசெய்யும் ஒரு கேடயமாகவும் அமைந்துள்ளது.

---

## பாஷை புரியாது!

ஒவ்வொரு விலங்கினமும் தன் இனத்திடையே ஒருவகை அடையாள மொழியைக் கையாளுகிறது அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாழும் காகங்கள் பிரான்ஸ் நாட்டின் காகங்களின் சமிக்ஞைகளை அறிய முடிவதில்லை. கருங்கடல் டால்பின் மீன்கள் மத்தியதரைக் கடல் டால்பின் மீன்களின் அடையாளச் சின்னங்களை அறியமுடிவதில்லை. சில புலிகளும், பறவைகளும் வேற்றிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டு அங்குள்ள புலிகளோடும் பறவைகளோடும் பழக விட்டதில் உணவுக்கான அடையாள ஒலியையும், ஆபத்துக்கான அடையாள ஒலியையும் ஓரிடத்து இனம் பிற இடத்து இனத்திலிருந்து விளங்கிக் கொள்ளவில்லையென்று விலங்கியலாளர் அறிவித்துள்ளனர். (வௌ. நி)

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## நல்லூர் முருகா!

பன்னிரு கரங்கள் கொண்டு
பவளவாய்ச் சிரிப்பு நல்கி
என்துயர் தீர்த்த செவ்வேள்
ஏற்றமும் தந்த துன்வேல்
மன்னவா! தமிழர் உள்ளத்
துறைபவா! முருகா
உந்தன்
பன்மலர் பாதம் போற்றிப்
பணிகிறேன் அருள்
செய்யாயோ!

இணுவை என்.எஸ்.பி.

## அதிசயம்! ஆனால் உண்மை!!

● பறவைகளைத்தான் பலர் சாப்பிடுகின்றனர். ஆனால் ஒரு பறவையின் கூட்டையும் சாப்பிடுகின்றார்கள் சீனர்கள். 'தகைவிவான்' என்னும் ஒரு குருவி தன் உமிழ்நீரைக் கொண்டு கூடுகட்டுகிறது. உமிழ்நீர் காய்ந்து இறுகியிருக்கும். அந்தக் கூட்டைக்கொண்டு சூப் செய்து சாப்பிடுகிறார்கள் அவர்கள்.

● குருடர்கள் படிப்பதற்கான 'பிரைல்' எழுத்துக்கள் புடைப்பான புள்ளிகளாலானவை. கைவிரல்களால தடவித்தான் வாசிக்க முடியும். அந்த எழுத்துக்களைக் கண்டுபிடித்தவரே ஒரு குருடர்தான்! அவர் பெயர் 'லூயிஸ் பிரைல்'

● ஷேக்ஸ்பியருடைய பிறப்பிலும் இறப்பிலும் ஓர் ஒற்றுமையுண்டு. 1564 ஏப்ரல் 23-ம் நாள் பிறந்தார்; 1616 ஏப்ரல் 23-ம் நாள் இறந்தார்.

-செல்வி ஜஹறுநல்
எச். அபூஸாலிஹ்
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## மணிமொழிகள்

மனிதர்கள் பல வகைகளில் கருமிகளாகவும், புல்லர்களாகவும் இருக்கிறார்கள். பண விஷயத்தில் கருமிகளாக இருப்பவர்களைவிட மிகப் பெரிய கருமிகளும் இருக்கிறார்கள். இறைவன் தந்துள்ள வார்த்தைகளை நல்ல வழியில் செலவு செய்யவேண்டும். தீச்செயலில் பணம் செலவு செய்து துன்பம் அடைவது போலவே. தீச்செயல் கூறி-பொய்பேசி வாழும் வாழ்வும். ஆனால் நீங்கள் நல்லவைகளைப் பாராட்டுவதில் கருமிகளாக இருக்காதீர்கள் இதைவிட இன்னுமொன்று உள்ளது; அதுதான் நீங்கள் மற்றவர்களை வாயார நன்றாய் இரு என்று வாழ்த்துவது. உங்கள் பகைவரையுங்கூட வாழ்த்துங்கள். நீங்கள் பணக் கஞ்சராக இருங்கள். நல்லவைகளைப் பாராட்டாமல் வார்த்தைத் தரித்திரர்களாக மட்டும் இருக்காதீர்கள்.

-ஸ்ரீதுர்க்கைச் சித்தர்

தன்னடக்கம் ஒருவரின் ஆற்றலை அதிகரிக்கிறது தன்னடக்கமுள்ள மனிதன் பாவமற்றவனாகவும் பயமற்றவனுயுமாகிப் பெருங்குணங்கள் ஈட்டுகின்றான்

-சுவாமி சிவானந்தர்

கொடு, அதன் மதிப்பைக் கணக்கிடாதே. போரிடு; காயங்களைக் கவனியாதே. பாடுபடு; ஓய்வை தேடாதே.

-இக்னேஷியஸ் லயோலா

தொகுப்பு
ஏ. [illegible]
இந்து [illegible] ரூரி
கே. கே

## ஒழுக்கம் பேணப்படுகிறது

கூட்டுக்கல்வியின் மூலம் பல தரப்பட்ட நன்மைகளைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

மாணவர்கள் அல்லது மாணவிகளுக்கிடையில் தனித்தனியே கல்வியில் ஏற்படும் போட்டி மனப்பாங்கிலும், ஆண்-பெண் கூட்டுக்கல்வியின் போது ஏற்படும் போட்டி மனப்பாங்கு மனயியல் ரீதி காரணமாக அதிகமாக இருக்கின்றது. எனவே கல்வியில் ஊக்கமுடையவர்களாக அதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். இதனால் இவர்களது கல்வி கூட்டுக்கல்விமுறையால் மேலும் வளம்பெறசந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

வும் அவர்களை மதிக்காமல் விடவும் செய்கின்றது. அதே நேரத்தில் பெண்கள் ஆண்களைப்பற்றி தாழ்வாகவும், எதிரிகளாகவும் நினைக்கின்றனர், கூட்டுக்கல்வி முறையால் இப்படியான நிலைமைகள் தவிர்க்கப்படுகின்றது.

மேலும் ஆண்-பெண் கூட்டுக்கல்வியின்போது இருபாலாரும் பாடசாலையில் கட்டுப்பாட்டுடன் இருக்கின்ற நிலைமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் இவர்களின் வாழ்வில் ஒழுக்கம் பேணப்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

## ஆண் - பெண் கூட்டுக்கல்வி

மேலும் கூட்டுக்கல்வி ஆண்-பெண் இருபாலாரும் ஒருவருடன் ஒருவர் பழக சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருகின்றது இதனால் ஒருவரைஒருவர் நன்கு புரிந்து கொள்ளும்மனப்பாங்கும், அவர்களுக்கிடையில் சகோதரத்துவமான உறவும் வளர்வதற்கும் வழிவகுக்கப்படுகின்றது. இதற்குமாறாக தனித்தனியான பாடசாலைகளில் கல்விகற்கும்போது ஒருவரைப்பற்றி ஒருவர் அறிந்து கொள்ள சந்தர்ப்பங்கள் ஏற்படுவது மிகக்குறைவு. இதன் காரணமாக ஒருவரைப்பற்றிய ஒருவரது தவறான அபிப்பிராயங்களே அதிகமாகக்காணப்படும்.

பெண்களுடன் பழகாமல் ஏன் தடுக்கின்றார்கள் என்ற நினைப்பு பெண்ணை வெறுக்கவும்... பெண்களுக்கு சமுதாயத்தில்சமபங்குவழங்கப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் பல தரப்பட்ட சந்தர்ப்பங்களில்- பலவகையான தொழில்முறைகளில ஆண்களும் பெண்களும் சேர்ந்து பழகவேண்டி நேரிடுகின்றது. இப்படியானசந்தர்ப்பங்களில் சுமுகமான முறையில் நடந்துகொள்ளவும் - தவறான அபிப்பிராயங்களின்றி ஒருவரில் ஒருவர் நம்பிக்கை வைத்து நடந்து கொள்ளவும் இந்த ஆண்-பெண் கூட்டுக் கல்வி முறை பிற்காலத்தில் பெரிதும் பயன்படுகின்றது

எனவே கூட்டுக்கல்வி பல வகையில் நன்மைபுரிகிறது.

எஸ். சிவகுமாரன்
உரும்பராய்
இந்துக்கல்லூரி.

## வலுப்படுத்த வேண்டியது கல்விமான்களின் கடமை

சமுதாய அமைப்பிலே ஆண் பெண் இணைந்துகாணப்படாத இடங்களே இல்லை.

வீட்டிலே, ஆலயங்களிலே, வீதிகளிலே, பஸ்ஸிலே, தொழிற்சாலையிலே, புகையிரதத்திலே எங்கே பார்த்தாலும் ஆணும் பெண்ணும் ஒருங்கே நடமாடுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இப்படி இருக்கையில் கல்விக்கூடங்களை மட்டும் ஆணுக்கு வேறு பெண்ணுக்கு வேறாக அமைப்பதன் அர்த்தம் புரியமுடியாத ஒன்றுதான்.

மாணவிகளுடைய நடத்தை, ஒழுக்கம் என்பன மாணவர்களால் பாதிக்கப்படுகிறது என்றும் ஒருங்கிணைந்த வகுப்பில் சிந்தனைசிதறடிக்கப்படுகிறதென்றும் இதனால் கூட்டுக் கல்வி அவசியமற்றதென்றும் சிலர் தப்பான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. ஏனெனில் தனிப்பாடசாலைகளில் படித்த மாணவனோ அல்லது மாணவியோ படிப்பு முடிந்ததும் ஆண், பெண் ஒன்றாக அமைந்த உலகத்துக்கே மீண்டும் வருகிறார்கள்.

எனவே படிக்கின்ற நேரத்தில் சமுதாய அமைப்புக்கு ஏற்றபடியான அமைப்பையுடைய கலவன் பாடசாலைகளில், படிப்பதுதான்விரும்பத்தக்கது. மேலும் கலவன்பாடசாலைகளில் படித்த மாணவ, மாணவியரைவிட தனியான பாடசாலைகளில் படித்த மாணவ, மாணவிகள் கூடிய நல்லொழுக்கம் உடையவராகக் காணமுடியாமலும் இருக்கிறது. எனவே ஆண், பெண் கூட்டுக்கல்வியை வலுப்படுத்த வேண்டியது கல்விமான்களின் கடமையாகும்.

வே. சிவசுந்தரம்
துளரய் வீதி,
அராலி.

## கல்வி வளராது

கூட்டுக்கல்வி என்பது, யார் அதிக பெறுபேறுகளைப் பெறுவது என்ற போட்டியை உண்டாக்குவதால் நன்மை பயக்கக் கூடியது. மாணவர்களும் ஊக்கமாகப் படிப்பார்கள்.

ஆனால் ஆண்-பெண் கூட்டுக் கல்வி சிலருக்கு வெற்றியைத்தரும். பலருக்குத் தோல்வியை அளிக்கும். ஆணும் பெண்ணும் சந்திக்க, உரையாட கல்விகற்கும் நேரம்தான் சாத்தியமாகும்.

இயற்கையான உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத ஆண்-பெண்கள் கூட்டுக்கல்வி கற்க முனைந்தால் கல்வி வளராது. காதல் தான் வளரும்.

எனவே ஆண்களும், பெண்களும் தனித்தனியாகப்படித்தால் வெற்றி பெறுபவர்கள் தொகை அதிகமாக இருக்கும்.

யோ. பாலேஸ்வரன்
[illegible]
[illegible]

## மாணவமணிகளே!

உங்கள்படைப்புக்களை குறுகியதானால் முடிந்தளவு தபாலட்டைகளிலேயே எழுதுங்கள். உங்கள்பெயருடன் நீங்கள் கல்விகற்கும் கல்லூரியின் பெயரை எழுதத்தவறாதீர்கள். கல்லூரிப் பெயருடன் வரும்படைப்புகளே உங்கள் எண்ணத்தில் பிரசுரமாகும்.

## அன்புத் தோழன்

-சி. வி. குணசேகரம்-

விஜயபுரி அரண்மனை, பனை போல் நெடுதோங்கி நின்றாலும் அமாவாசை இருட்டின் கருமை அதை மறைத்துக் கொண்டுவிட்டது. மூன்றாம் மாடத்து நிலாமுற்றத்தில், விஜயபுரி மன்னன் மகேந்திர பூபதி உலவிக்கொண்டிருந்தான். அவன் விழிகளில் அனல் தெறித்தது. கைகள் இரண்டையும் பின்னால் கட்டியபடி, அம்புபட்ட சிங்கம் போல் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தான். சிறிது நேரத்திற்கு முன்பு நடந்த ஒரு பயங்கர நிகழ்ச்சி அவனைக் கதிகலங்கச் செய்திருந்தது.

விஜயபுரியில் சமீப காலமாகக் கொள்ளையடித்துவரும் பயங்கரக் கொள்ளைக்காரனான கொள்ளிக்காடன், அரை நாழிகைக்கு முன்பு விஜயபுரிச் சேனாதிபதி விஜயவர்மனையும் அவனது குடும்பத்தையும் பயங்கரமாகக் கொலைசெய்துவிட்டு அங்கிருந்த பொருட்களையெல்லாம் கொள்ளையடித்துச் சென்றுவிட்டான்.

அந்த மண்டபத்தில் முப்படைத் தளபதிகளும், முதல் அமைச்சர் மணிவர்மனும் இருந்தனர். அவர்கள் முகம் திகிலடைந்திருந்தது. யாரும் எதுவும் பேசத் தோன்றாது, சிலைபோல் அமர்ந்திருந்தனர்.

''மன்னா, இப்படியே சிந்தித்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?'' என்று பேச்சைத் தொடங்கினார் அமைச்சர் மணிவர்மன்.

மன்னனின் சினம் தலைக்கேறியது. வலதுகையை மூடி, இடதுகைக்குப் பலமாகக் குத்திய மகேந்திரபூபதி, ''மணிவர்மா! இனிமேலும் கொள்ளிக்காடனின் அட்டகாசத்தைப் பொறுக்கமுடியாது. உடனே அவனைப் பிடித்துத் துண்டுதுண்டாக வெட்டிப் போடவேண்டும்'' என்றான் பல்லை நெருமியபடி.

''உத்தரவிடுங்கள் பிரபு, அவனைக் கட்டி இழுத்துவந்து, உங்கள் முன்பு நிறுத்துகின்றேன்'' என்றான் குதிரைப் படைத் தளபதி விஜயசிங்கன்

மணிவர்மனின் முகத்தில் கேலிச் சிரிப்பு மின்னியது.

''விஜயசிங்கா, நீ நினைப்பதைப்போல் கொள்ளிக்காடன் அவ்வளவு இலகுவாக அகப்படமாட்டான். அவன் பயங்கரக் கொள்ளைக்காரன் மட்டுமல்ல, கொடிய மந்திரவாதியுங்கூட.' என்றான்.

''அப்படியா!'' என்றான் விஜயசிங்கன்.

''மணிவர்மா, அவனைப் பற்றி வேறென்ன உனக்குத் தெரியும்?'' என்று கேட்டான் மன்னன் மகேந்திரபூபதி.

''மன்னா, அவன் வெறியாட்டத்தை நடத்தும்போது அவனது உருவம் கண்ணுக்குத் தெரியாது. தீப்பந்தம் மட்டும்மான் நடமாடும்.''

விஜயசிங்கன் திகிலடைந்து போய் இருந்தான்.

மகேந்திரபூபதியின் முகம் வியர்த்தது. அடுத்துச் சில கணம் சபையில் நிசப்தம். சிறிது நேரம் யோசித்தபடி உலவிய மன்னன், ''மணிவர்மா... நாளைய பொழுது அஸ்தமமாவதற்கு முன் அவனைக் கைதுசெய்வதற்கான திட்டத்தைத் திட்டு. சரி, நீங்கள் போகலாம்'' என்றான்.

சபை கலைந்தது, எங்கோ ஒரு சாமக்கோழி கூவியது. மன்னன் மகேந்திரபூபதி யோசனையோடு நிலாமுற்றத்திலே உலாவிக்கொண்டிருந்தான்.

அரண்மனையின் பின்பக்கத்திலிருந்த வீதியில், குதிரையின் குளம்பொலி கேட்டது. மன்னன் மகேந்திரபூபதி பரபரப்புடன் சாளரத்தினூடாகப் பார்த்தான். யாரையும் காணவில்லை.

(9-ம் பக்கம் பார்க்க]

## மாணவச் சிரிப்பு

மாணவன்; சேர், மிருகங்களும் கால்களால் தான் நடக்கின்றன. மனிதர்களும் கால்களால்தான் நடக்கிறார்கள். ஏன் மிருகங்களைமட்டும் கால்நடை என்கிறோம்.

ஆசிரியர்: தம்பி, மனிதர்களுக்கு மூன்று நடைகள் உண்டு. அதாவது பேச்சுநடை அல்லது எழுத்து நடை, குணநடை; மற்றையது தான் கால்நடை. எனவேதான் மனிதனை கால்நடை என்று அழைப்பதில்லை.

ஆசிரியர்: படிப்பித்துவிட்டு) இதுவரை படித்ததில் ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள.

மாணவன்: சார, வந்து... வந்து......

ஆசிரியர்: சும்மா தைரியமாகக் கேள். பயப்படாதே.

மாணவன்: வந்து...சார் இதுவரை எதைப்பற்றி படிப்பித்தீர்கள்?

-- க. சூலேந்திரன்
வட்டு இந்துக் கல்லூரி.

## வரப்பிரசாதம்

மாணவர் எண்ணம் இளம் சமுதாயத்திற்கு குறிப்பாக மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

ரி. பற்றிக்.
டிறிபேர்க் கல்லூரி,
சாவகச்சேரி.

## விடைகள் தெரியுமா?

### கடந்தவாரக் கேள்வியின் பதில்

10 சாக்குகளுக்கும் 1, 2, 3, 4 என நம்பர் இடவேண்டும். பின் 1-ம் சாக்கில் 1 மாபிளையும் 2-ம் சாக்கில் 2 மாபிளையும் 3-ம் சாக்கில் 3 மாபிளுமாக முறையே இவ்வாறு 10 சாக்குகளிலும் 55 மாபிளகளைஎடுத்து தராசில் போட்டு நிறுக்கும்போது 55 இருத்தலுக்கு எத்தனை அவுன்ஸ் குறைகிறதோ குறைந்த அளவு இலக்கமுடைய சாக்கே 1 அவுன்சால் குறைவான மாபிள் கொண்ட சாக்காகும்.

குறிப்பு; கடந்த வாரக் கேள்விக்கு அநேக மாணவர்கள் பதிலெழுதியிருந்தார்கள். கீழே குறிப்பிடும் மாணவர்களே முற்றும் சரியான பதிலை எழுதியிருந்தனர்.

நா. பஞ்சலிங்கம்.
7-ம் வட்டாரம்.
புங்குடுதீவு

ச. பத்மராணி,
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

தி. பவானி,
யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

தி. பிரபாகரன்,
விக்ரோறியாக் கல்லூரி,
சுளிபுரம்.

ச. இந்திராணி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்

# துரோகி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளே நுழைந்தவன் திகைத்து நின்றுவிட்டான். கணவனின் திடீர் வருகையையும் அவனது கோபத்தையும் கண்டு திகைத்துப்போனுள் லலிதா.

விஷயம் ஒன்றுமில்லை. உள்ளே ரேடியோவில் லலிதாவின் நாடகம் ஒன்று ஒலி பரப்பாகிக்கொண்டிருந்தது.

விஷயம் புரிந்தபோது அவனுக்கே வெட்கமாகவிருந்தது விஷயத்தை விளங்கிக் கொண்டபோது வாய்விட்டுச் சிரித்தாள் லலிதா!

(கற்பனை)

# சிறுகதை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

''சரி... யாரையாவது பிடித்து இருந்தால் சொல்லு...''

''பிடித்தவர்கள் எல்லாரும் கைவிட்டு விட்டார்கள்...''

''என்ன சொல்லுகிருய் ஆனந்தா.''

''பிடித்தவள் வரும்போது சொல்லுகிறன்...''

''அப்போ...இப்போ...''

''தொல்லைகள் இல்லையெண்டால் போதும்...''

ஆனந்தனின் மனநோயைப் பண்டிதர் நாடி பிடித்துப் பார்த்துவிட்டார்.

''ஆனந்தா ... எதிர்பார்ப்பவை எதிர்பார்த்தபடி எதிர்பார்க்கும்நேரத்தில் நடந்தால் மனித வாழ்க்கையில் துயரம் இருக்காதுதான். ஆனல் அதில் சுவையும் இருக்காது. எதிர்பார்ப்பவை எல்லாம் எதிர்பாராமல் நடந்தால் அதில் சுவை இருக்கும். தொல்லை இல்லாத வாழ்க்கை யாருக்கு இருக்கு. எதையும் எதிர்த்துப்போராட வேண்டும், போராடத் தெரிந்தவனுக்குத்தான் வாழ்க்கை வாழ்வதற்கே. போராடத் தெரியாதவர்களுக்குவாழ்க்கை சாவதற்கே. துணிந்து நில். தொடர்ந்து செல்... தோல்வி கிடையாது...''

''மாபெரும் சபையில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழவேண்டும். மாற்றுக்குறையாத பொன்னென்று உன்னை போற்றிப்புகழ வேண்டும்''.

நீ என்ரை மாணவன் என்ற படியால் சொல்லுறன்... சென்றுவா... வெற்றி கிட்டட்டும்...'' என்று பண்டிதர் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்ஞர்.

ஆனந்தனின் துயரக்கண்ணீர் கட்டுப்பட்டது...புது மலர்ச்சி ஏற்பட்டது... துணிவு பிறந்தது...

''தொல்லை இனி இல்லை'' என்று கத்திஞன்.

''ஆனல் ஆனந்தா ... ஒரு தொல்லை கெதியாக வரவேணும்''- பண்டிதர் பீடிகையுடன் கதைத்தார்.

''என்ன தொல்லை...''

''அன்புத் தொல்லை... இனிமையான தொல்லை...''

''அப்படி ஒருதொல்லையா''

''உனக்கு வரப்போகும் ஒருத்தி தரும் தொல்லை''.

ஆனந்தனுக்கு சிரிப்பு வந்துவிட்டது...

''இந்த ஆனந்தனுக்கு ஒருத்தி வரத்தானே வேணும்...''

''ஓம்...அதற்கு ஓர் ஆனந்தி தான் வரவேணும்...''

சிரிக்க முயல்கின்ருன்... சிரிக்க முடிகின்றது...

அவனுக்குத்தான் தொல்லை இனி இல்லையே...

(யாவும் கற்பனை)

# அன்புத்தோழன்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது நேரத்தில் 'ஹ ஹ ஹ ஹ...' என் அரண்மனையை அதிரவைக்கும் பயங்கரச் சிரிப்பொலி கேட்டது.

சிவந்த கண்களுடனும், சிலிர்த்த ரோமங்களுடனும் மண்டபத்தை நோட்டம்விட்டான் மன்னன். எவரையும் காணவில்லை.

மீண்டும் பயங்கரச் சிரிப்பொலி எழுந்தது. மகேந்திர பூபதியின் இரத்தம் கொதித்தது. வாளை உருவிய வண்ணம் வாசலை நோக்கித் திரும்பிஞன்.

வாசலில் தீப்பந்தம் ஒன்று நின்றது. பின் அது முன்னேக்கி நகர ஆரம்பித்தது. மன்னனின் உடல் துடித்தது. மகேந்திதிரபூபதியின் நெஞ்சு பயத்தால் 'திக்திக்' என்று அடிக்கத் தொடங்கியது.

''மேன்மைதங்கிய விஜயபுரி மன்னன் மகேந்திரபூபதி அவர்களே! சிறிது நேரத்திற்கு முன்பு, கொள்ளிக்காடனைத் துண்டுதுண்டாக வெட்டிப் போட வேண்டுமென் றீர்களே, இதோ நேரில் வந்திருக்கிறேன். தைரியமிருந்தால் வெட்டுங்கள் பார்ப்போம்'' என்று ஏளனமாக முழங்கியது ஒரு குரல்.

மகேந்திரபூபதிக்கு உடல் வியர்த்தது. வெட்கத்தாலும், அவமானத்தாலும் அவனுடல் கூனிக்குறுகியது. பல வலிமை மிக்க அரசர்களைப் போரில் வென்ற மன்னன் செய்வதறியாது திடுக்கிட்டுத் திகிலடைந்துபோய் நின்ருன்.

''மகேந்திரபூபதி இதுதானு உன் வீரம்?'' என்று முழங்கிய குரல் பலமாகப் பேய்ச் சிரிப்புச் சிரிக்கத் தொடங்கியது.

''கொள்ளிக்காடா, நீ வீரமுள்ளவனுனல், ஏன் பெண்களைப்போல் மறைந்திருந்து கொக்கரிக்கிருய். தைரியமிருந்தால் உன் உருவத்தைக் காட்டு?'' என்று மகேந்திர பூபதி ஆத்திரத்தோடு கத்திஞர்.

மீண்டும் பயங்கரச் சிரிப்பு எழுந்தது. மறுகணம் தீப்பந்தத்தைக் காணவில்லை. அந்த இடத்தில் பெரிய மலையைப் போன்ற ஓர் உருவம் நின்றது. (அடுத்த எண்ணத்தில்)

# அண்ணன் அமிர்தலிங்கம்

-அரியாலையூர் வே. ஐயாத்துரை

ஆளும் எதிர்க்கட்சி அண்ணல் அமிர்தலிங்கம்
வாழத் துணைபுரிவாய் வாணியம்மா-ஈழத்தின்
தன்னிகரில் லாத்தலைவன் தண்டமிழார் நற்புதல்வன்
முன்னணிக்கோர் நல்லணியாம் முத்து.

தம்புத்தி ஞானம் தழைத்துத் தமிழ்வாழ
தெம்புற்றே வாழும் திலகமவர்-சம்பத்தார்
ஐம்பத்தி ஒன்றில் அடியெடுத்து வைக்கின்ருர்
செம்பொன் அமிர்தலிங்கம் சேய்.

செல்வாவின் சீர்வழிகொள் சேயாய் அமிர்தலிங்கம்
நல்லாசி பெற்றுயர்ந்தார் நாட்டினிலே-எல்லோர்க்கும்
அண்ணன் அழகுமறை அன்பார் அமிர்தலிங்கம்
அண்ணலே வாழ்க அருள்.

# ஜயந்தி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றது, இந்த சிங்களர் பூமியிலே!' என்று மனதுக்குள்ளாக எழும் முணுமுணுப்புடனே போர்வைத்துணியை இழுத்து காதிரண்டினையும் மூடிக்கொண்டு மரக்கட்டையாய் அசையாமல் கிடந்தேன்-உறக்கம் ஓடிமறைந்தபின்னும் அதுசமயம்கண்களில் துளிர்த்த கண்ணீரைக் கைவிரல்கள் தாமாகப் பிறிதொருவர் அறியாமலே மெல்ல ஒற்றிஎடுத்து மறைத்துவிடுகின்றன. ரயில் பெட்டியில் எனக்குக்கிடைத்த ஆசனமும் அதனேடு மற்றும் நான்கு அதுபோன்ற இருக்கை பீடமும் ரயில் பெட்டியின் ஓர் அந்தத்தில் தடுப்பிடப் பெற்று ஒதுக்கமாக அமைந்திருந்தது. நான் ரயில் ஏறிய போதே கைப்பற்றிய ஆசனத்தை மருவினுற்போலிருந்த கதவு திறக்கக்கூடாதபடி பூட்டியிருந்ததால்பிரயாணிகளால் எனக்கு தொல்லையில்லை. அடுத்தடுத்து ஆசன ஒதுக்கங்களில் சம்பவித்த அமளிதுமளி எல்லாம் அங்கிருந்த வாயில் வழியாகப் புகுந்தவர்களால் சம்பவித்ததுதான். படுத்துறங்கிய பிரயாணிகள் புதுக்கஎறிய வர்களுக்கு இடம் விட்டுக் கொடுத்து எழுந்து உட்கார்ந்திருந்து கண்ணுறக்கம் இன்னும் முழுதாய் கலையாமலே கொட்டாவி விட்டும், புகையிலைச்சுருட்டுப் பற்றவைத்தும் அடுத்தடுத்த ரயில் தரிப்பிடங்களை விசாரித்தும் எதிரே இன்னும் சில பணிப்பொழுதே நீண்டுகிடந்த இருட்கடலில் உதயத்தை நோக்கி எதிர்நீச்சலடித்து தத்தளித்தார்கள்.

(தொடரும்)

# இங்கிலாந்தில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இவைகள்தாம் இந்தப்புதிய நாஜிகள் பிரிட்டிஷ் மக்களை நம்பவைக்கப்பார்க்கும் படுபொய்கள். உண்மையான பிரச்னைகளை இவை மறைத்துவிடுகின்றன.

நாஜி ஜெர்மனி என்னத்தை உருவாக்கியது? ஒரு பொலிஸ் ராஜ்யம், தடுப்புமுகாம்கள், இறுதியில் உலக மகாயுத்தம். இவர்கள்பொய்யர்கள், ஏமாற்றுக்காரர்கள். இவர்கள தமது பொய்களைப் பரப்பி, என்னத்தைச் செய்வார்களென்று தொழிற்சங்கவாதிகள் மக்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். மனிதர்களென்றமுறையில் இவர்களுக்கு செவிசாய்க்கவே கூடாது. இவர்கள தப்பித்தவறியாவது பதவிக்குவந்துவிட பிரிட்டிஷ் மக்கள் இடம் வைத்துவிடக்கூடாது.

('ஃபூட்வேர்க்கர்' என்ற சஞ்சிகையில் ஜோன் புரோட்ஹார்ட்என்பவர் எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதிஇது.)

# ஆவி...

[5-ம் பக்க தொடர்ச்சி]

கில் ஒரு நாக பாம்புக் குட்டி படுத்திருந்தது. அதைக்குட்டி என்பன தவிட நடுத்தரப்பாம்பு என்றுதான் கூறவேண்டும். எனது வீட்டினர் அதை அடித்து விடும்படியாகக் கூறினர். அன்று வெள்ளிக்கிழமை. அதுவும் நல்ல பாம்பு. எனவே அதைக் கொல்ல எனக்கு மனமில்லை. மீடியப் நண்பரும் நானும் அங்கேயே நின்றபடி ஆவிசனை அழைத்தோம். எங்கள் வழிகாட்டும்ஆவி தாமோதரன் வந்தார் ''அதை அடிக்காதீர்கள். வழிதவறி வந்துவிட்டது. தானுக அகன்று விடும், நீங்கள் உள்ளே போகலாம்'' என்ருர். அதை அடிக்க மாட்டோம். ஆனுல் அது போய்விட்டது என்று தெரியாமல் வீட்டினுள் செல்லமுடியாது என்று மறுத்தோம். தாமோதரன் சிறிது நேரம் பிரார்த்தனை செய்வதாகக் கூறுஞர், மௌனம்நிலவியது. அப்போது அப்பாம்பு படமெடுத்தபடி எங்களையே பார்த்துக் கொண்டிருந்தது. பிறகு தாமோதரன் பேசினர், அதனுல் ஆபத்தில்லையென்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். இப்போது திரும்பிப் பார்த்தால் பாம்பைக் காணேம். அது எங்கும் ஓட வழியில்லை. அது எங்களைத் தாண்டிக் கொண்டுதான் செல்லவேண்டும். காரணம் நாங்கள் வழி மறித்துக்கொண்டு நின்றிருந்தோம். அவற்றிலும் துவாரமில்லை. எங்கு தேடியும் பாம்பு கிடைக்கவில்லை, மாயமாய் மறைந்துவிட்டது. அதைத் தேடிச் சலித்துப்போய் வீட்டினுள் சென்றுமீண்டும்ஆவியை அழைத்தோம் குழப்பத்தின் பின் அமைதி அல்லவா?என்று பேச்சை ஆரம்பித்தார்தாமோதரன். பாம்பு மறைந்தமாயம் பற்றிக் கேட்டபோது இதெல்லாம் அவன் திருவிளையாடல். விடுங்கள் என்ருர். நீங்கள் செய்த பிரார்த்தனைக்கும் பாம்பு மறைந்ததற்கும் சம்பந்தம் உண்டா என்ருேம், ஆனுல் அதற்கு தகுந்த பதில் கூறுமல் பேச்சை மாற்றிவிட்டார் அவர். இன்றுவரை இந்த இரண்டு பாம்புச் சம்பவங்களும் எங்களுக்கு மர்மமாகவே உள்ளன. நேரில் கண்டதால் நம்பாமலிருக்கவும் முடியவில்லை. நம்பவும் முடியவில்லை.

இப்படி ஆவிகள் மூலம் நான் அடைந்த அடைந்து கொண்டிருக்கும் அனுபவங்கள் எத்தனையோ? அவைகளில் சிலவற்றை மட்டுமே தெரிவித்துள்ளேன். பிற அனுபவங்களையும் அவ்வப்போது உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன்.

(முற்றும்)

வெஸ்லி
(மாவிட்டபுரம்)
தினசரி 6-30, 9-30
எம். ஆர். ராதா - பத்மினி
சித்தி

நாகம்மஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
KARATE AMAZONS
From: 1-9-78
FRIDAY FOSTER
(adults only)

REGAL Jaffna 3rd CROWDED WEEK
Phone: 360
Daily 10-30 a. m., 2-00, 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
வீட்டு மாப்பிள்ளை
(புதிய பிரதி)

லிடோ (யாழ் நகர்)
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
தீர்க்க சுமங்கலி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
கடைசி வாரம்
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சாவித்திரி
வீரப்பா - எம். என். ராஜம் - சந்திரபாபு
நடித்த
ம கா தே வி [புத்தம் புதிய பிரதி]

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி - தேவிகா
நடித்த
ஆடிப்பெருக்கு
(புதியபிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

# கடற்படை உத்தியோகத்தர் என்னை கத்தியால் குத்தினர்

## முன்னாள் யாழ். வளாக மாணவன் சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியம்

(கொழும்பு)

''என்னைக் கத்தியால் குத்தியவர் கடற்படை உத்தியோகத்தர் என்பதைப் பின்னர் அறிந்துகொண்டேன்.''

இவ்வாறு யாழ்.வளாக முன்னாள் மாணவன் மாரசிங்கா நேற்றுமுன்தினம் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மீண்டும் நான் கீழே விழுந்தபோது வளாகத்துக்கு உள்ளே தூக்கிச் செல்லுமாறு கேட்டேன். 3 மாணவர்கள் என்னைத் தூக்கிச்சென்று வளாக மைதானத்தில் கிடத்தினார்கள். அப்போது அவ்விடம் வந்த விரிவுரையாளர் ஒருவரின் காரில் யாழ். ஆஸ்பத்திரிக்கு என்னைக் கூட்டிச்சென்று அங்கு அனுமதித்தனர். ஆஸ்பத்திரிக்குப் போது வட்டுக்கோட்டைச் சந்தி பஸ் நிலையத்தில் சில சிங்கள மாணவிகள் நின்றனர்.

யாழ். ஆஸ்பத்திரி 17-ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட எனக்கு உடன் 2 சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டன. மறுநாள் மூளை நரம்புச்சிகிச்சை நிபுணர் டாக்டர் கப்ரால் கொழும்பிலிருந்து வந்து சத்திரசிகிச்சை செய்தார். எனக்குச் சிகிச்சை அளிக்க அவர் 3 தடவைகள் கொழும்பிலிருந்து வந்தார்.

### 6 கத்திக்குத்துக் காயங்கள்

எனது உடலில் 6 கத்திக்குத்துக்காயங்கள் இருந்தன. அவற்றில் வயிற்றிலும் பின்புறத்திலுமிருந்த காயங்கள் மிக மோசமானவை. தலையில் சைக்கிள் செயினால் அடித்த ஒரு காயமும் உடம்பில் பல காயங்களும் இருக்கின்றன.

எனது வயிற்றிலும் பின்புறத்திலும் விழுந்த கத்திக் குத்துகளினால் சிறுநீர்ப்பையும், முள்ளந்தண்டு நாணும் பாதிக்கப்பட்டுவிட்டன.

### இடுப்புக்குக் கீழ் உணர்ச்சியில்லை

இடுப்புக்குக் கீழ் இன்றுவரை உணர்ச்சியில்லை. மீண்டும் என்னால் நடக்கமுடியாது என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

### செயற்கை சிறுநீர்ப்பை

சிறுநீர்ப்பையும் பாதிக்கப்பட்டதால் இன்று சிறுநீர் கட்டுப்பாடின்றி வெளியேறுகிறது. எதைக் குடித்தாலும் அது உடன் வெளியேறிவிடுறது. இதற்காக வெளியில் செயற்கை சிறுநீர்ப்பை ஒன்றை அமைத்துள்ளனர். இங்கும் அதை அணிந்துகொண்டே வந்துள்ளேன்.

ஒரு வருடம் 6 மாதமாக ஆஸ்பத்திரியிலேயே இருக்கின்றேன். மார்ச் முதலாம் திகதி முதல் ஏப்ரல் 6-ம் திகதிவரை யாழ்.ஆஸ்பத்திரியிலும் கொழும்பு ஆஸ்பத்திரியில் 3 மாதங்களும் பதுளை ஆஸ்பத்திரியில் ஒரு மாதமும் சிகிச்சைபெற்றுவிட்டு இப்போது ருகம புனர்வாழ்வு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறேன்.

### பஸ்ஸில் போகமுடியாது

வட்டுக்கோட்டைச்சந்தியில் உள்ள 'யோகாகபே சிங்களவருக்கு எதிரானது. யாழ்ப்பாணத்தில் நாம் பஸ்ஸில் போகமுடியாது. பஸ் ஆசனத்தில் இருந்தால் எம்மை எழும்பும்படி ஏசுவார்கள். நாம் எதிராக எதுவும் சொல்வதில்லை.

77 பெப்ரவரி 28-ம் திகதி பஸ்ஸில் பிரச்னை எழுந்ததும் எம்மை பஸ் ஆசனத்தில் அமரவிடாது தடுத்தபோது 'காசு கொடுத்துப் பிரயாணம் செய்யும் நாம் ஏன் பஸ்ஸில் இருந்து போக முடியாதா?' என்று கேட்டேன். அப்போது நரேந்திரன் 'இது எங்கள் இராச்சியம் நீங்கள் இருந்து போகமுடியாது நின்றுதான் பயணம் செய்ய வேண்டும்.'

### அன்று நான்கேட்ட கேள்வியினால்

அன்று பஸ்ஸில் கேட்ட கேள்வியினாலேயே எனக்கு இன்று இந்தநிலை ஏற்பட்டுள்ளது. படிப்பைத்தொடர்ந்து சமூகத்தில் ஒருமுழுமனிதனாக வரவேண்டும் என்றுதான் யாழ். வளாகத்திற்குப் போனேன். ஆனால் இப்போது வாழ்நாள் முழுவதுமே நோயாளியாகிவிட்டேன்.

இந்தச் சம்பவத்தில் மோசமாக பாதிக்கப்பட்ட எனக்கு எதுவித நஷ்டஈடும் வழங்கப்படவில்லை. நான் இப்போது வந்திருக்கும் சக்கரநாற்காலி கூட ஒருவர்பணம் கொடுத்து வாங்கித்தந்தது தான்.

எனவே இன்று உங்களிடம் பணிவன்புடன் கேட்கிறேன் எனக்கு நஷ்டஈடு பெற்றுத்தர நடவடிக்கை எடுங்கள்.

சாட்சியைத்தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் ஆஜாராகிய சட்டத்தரணி திரு. அண்டலூட் மணிவாசகம் இம்மாதம் 31-ம் திகதி குறுக்கு விசாரணை செய்வார். (ம-இ)

---



(நல்லைக்குமரன் கைலாய வாகன உற்சவம் இன்று)

## சிறியேம் சிற்றில் சிதையேலே

கோவை! கொவ்வைச் செழும்பவளக்
கொழுந்தே! குறவர் பசுங்கிளியும்,
குலிசன் அளித்த இளங்குயிலும்,
குனிக்கும் மயிலும் தனுத்(து) அகலாக்
காவே! வேதப் பெருங்கடலே!
கடலிற் கடையாக் கவுத்துவமே!
கங்கைப்புனலால் வளந்தெழுந்த
கரும்பின் சுவையே! கரும்(பு) இமிராப்
பூவே! பூவில் வரும் தேனே!
பெரும் கோளரியே! அரிய பரம்
பொருளே! உலகுக்(கு) ஒரு பொருளாம்
அவற்கும் விளங்காப் பொருள் விளங்கும்
தேவே! தேவக்குல முதலே!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சேயே! சேயூர்ப் பெருமானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே!

(-சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்)

---

### தந்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி கண்டுள்ளார். பல்லாண்டுகள் பல்துறைகளிலும் சேவையாற்ற எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (கெ-இ)

### பயங்கர...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்கள் மீதான வழக்குகளைத் துரிதமாகப் பைசல் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் குற்றங்கள் நிரூபிக்கப்படுபவர்கள் மீது அதிக பட்சத்தண்டனை வழங்குவதற்குச் சட்டம் வழி செய்வதாகவும், இதனைப் பொலிசாரும் வற்புறுத்துவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பிணையில் விடுதலையாகும் இப்படியான பயங்கரவாதக் குற்றவாளிகள் மீண்டும் குற்றங்களை இழைக்கிறார்கள் என்றும் இதனாலேயே வழக்குகள் முடியும்வரையில் இவர்கள் விளக்க மறியலில் வைக்கப்படுவதற்கு வழிசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

#### 6 கோஷ்டிகள் பிடிபட்டன

கொலைகளும். ஆயுதங்கொண்டு கொள்ளையடிசத்லும் குறைந்திருப்பது பற்றிக் குறிபபிட்ட பிரதி பொலஸ் மா அதிபர் கொழும்பில் மாத்திரம் இவ்வாறான 6 கொள்ளையர் கோஷ்டி மடக்கிப் பிடிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தக் கோஷ்டிகளில் நாடறிந்த (ஐ. ஆர். சி ) குற்றவாளிகளில் 250 பேர் இருப்பதாகவும் கூறினார்.

இநத ஐ. ஆர். சி.களில் அவ்வுன சந்திரே என்பவன் 32 வழக்குகளில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், ஐ. ஆர். சி. கருணசேன என்பவன் மீது 18 வழக்குகள் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

#### 48 மணி நேரத்தில் சாதனை

ஐ. ஆர். சி. நவாரியோ என்பவன் பிணையில் விடுதலையாகி 48 மணி நேரத்தில் தனது கோஷ்டியுடன்சேர்ந்து மூன்று கார்களைக் கடத்தியதுடன், 100 கூட்டுறவுக் கடைகளில் கொள்ளையடித்தான். இதற்கிடையில் ஒரு வங்கிக்குப் போய் அங்கு வங்கி மூடியிருந்ததால் வெளியிலிருந்த ஒரு பெண்ணிடம் பெருந்தொகை பணத்தைப்பறித்துக் கொண்டு போய்விட்டான் என்றார்.

## கூட்டணி இன்று முடிவுசெய்யும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழுவும் பாராளுமன்ற குழுவும் இன்று காலை யாழ்ப்பாணத்திலுள்ள கட்சித்தலைமைச் செயலக பணிமனையில் கூடுகின்றன.

தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் இக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

புதிய அரசியலமைப்பு நடைமுறைக்குவரும் செப்டம்பர் 7-ந் திகதி தமிழ்மக்களும் எம்பிக்களும் எவ்வாறு நடந்து கொள்வதென இன்று தீர்மானிக்கப்படும். (கெ-இ)

---

முன்பெல்லாம் இவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்தால் ஓரிரு மாதங்கள் தண்டனை பெற்று விடுதலையானதும் மீண்டும் தமது நடவடிக்கைகளைத் தொடங்கிவிடுவார்கள். ஆனால் இவர்களுக்குப் புதிய சட்டத்தின்படி குற்றவாளிகளாகக் காணப்பட்டால் 10 வருடம் வரையில் சிறைத்தண்டனை வழங்க முடியும்.

#### பயமின்றி சாட்சியம் அளிக்கலாம்

இதனால்சாட்சிகள்பயமின்றி நீதிமன்றங்களுக்கு வந்து சாட்சியமளிக்கமுடியும். சம்பவங்கள்பற்றி பொலிசிலும் பயமின்றி புகார் செய்யமுடியும் என்றார் திரு. சுந்தரலிங்கம்.

நாட்டில் கடந்த ஓராண்டில் 740 கொலைகள் நடந்திருப்பதாகவும் ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 50 கொலைகள் என்றும் அவர்கூறினார்.

புதிய சட்டம் அமுலுக்கு வந்தபின் ஜூன், ஜூலை மாதங்களில் இம்மாதிரியான குற்றங்கள் வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் சொன்னார்.

#### கூட்டுப் பந்தோபஸ்து

நீண்டதூரம் பொருட்கள் எடுத்துச்செல்லும் லொறிகள் பஸ்கள் போன்றவற்றை வழிமறித்துக் கொள்ளையடிப்பதற்கு எதிராகக் பொலிஸ்-ராணுவ-கடற்படைகளின் கூட்டுப்பந்தோபஸ்து ரோந்து நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், இதனால் யாழ்ப்பாணம், அனுராதபுரம் பாதைகளில் லொறிகளை மறித்து கொள்ளையடிப்பது குறைந்துவிட்டதாகவும் இதுமேலும் தீவிரப்படுத்தப்படும் என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் கூறினார்.

---

## மரண அறிவித்தல்

### இளையதம்பி — நாகலிங்கம்



மண்ணில் பிறப்பு: 22-3-1902

விண்ணில் பிறப்பு: 26-8-1978

யாழ்ப்பாணம், 121, முதலாம் குறுக்குத்தெரு, ஏசிஎஸ் தொகுதி ஸ்தாபன டைரக்ரரும் பிரசித்த நொத்தாரிசும், சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளருமான Y'SMAN C. S. S. முத்துக்குமாரு, கொழும்பு மருதானை சாகிராக் கல்லூரி S. V. பெருமாள் ஆகியோரின் மாமனும், திருமதி தனேஸ்வரி முத்துக்குமாரு— திருமதி தில்லைநாயகி பெருமாள் (சுதுமலை சகோதரிகள்) ஆகியோரின் அன்புத்தந்தையும், இராமநாதன் கல்லூரி ஜெயலக்ஷ்மி- ஜனலக்ஷ்மி, சன்மார்க்க போதனா வித்தியாசாலை இராதாகிருஷ்ணன், யாழ் இந்து மகளிர் கல்லூரி மகாலக்ஷ்மி, யாழ் மத்திய கல்லூரி கோபாலகிருஷ்ணன், உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அனந்தகிருஷ்ணன், மற்றும் சௌந்தரகிருஷ்ணன். மானிப்பாய் மெமோரியல் பாடசாலை ரஜினி- சுலோஜினி ஆகியோரின் அன்புப்பேரனும் மலாயன் பென்சனியருமான இளையதம்பி நாகலிங்கம் (Retd. P W D JOHORE BHARU, MALAYSIA) அவர்களின் பூதவுடல் 27-8-1978 ஞாயிற்றுக்கிழமை மாலை நாலு மணிக்கு ''நாத்தாரிஸ் இல்லம்'' மானிப்பாய் வீதி, முதலாம்கட்டை, உடுவிலிலிருந்து தகனக்கிரிகைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 0169

---

### அமிருக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் ஜனாதிபதியை கடிதமூலம் கேட்டிருந்தார். இக் கடிதத்திற்கு ஜனாதிபதியின் அந்தரங்கச்செயலாளர் அனுப்பியுள்ள பதிலில் இவ் வேண்டுகோளை ஏற்கமுடியாதென்று அறிவிக்குமாறு ஜனாதிபதி தம்மைப் பணித்துள்ளதாக எழுதியுள்ளார். (அ)

### புதிய

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

யில் மட்டும் தான் உண்டு

யாழ் மாவட்ட கலாச்சாரமன்றத்தினர் நடத்திய சிறுகதைப்போட்டி பரிசளிப்பு விழாவில் பேசிய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு டி பி விஜபதுங்கா மேற்கண்டவாறு கூறினார்

யாழ்ப்பாணம் சாந்திபட மாளிகையில் நடந்த இவ் விழாவில் தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளர் திரு சரத்துஅனுகவும் கலந்து கொண்டார்

அமைச்சர் விஜயதுங்கா மேலும் பேசுகையில் 'நாம் எல்லோரும் ஒரே இனத்தை அதாவது நாம் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள், உங்களுக்கு உறவினர்கள், நீங்கள் எங்களுக்கு உறவினர்கள். ஆகவே நாங்கள் ஒற்றுமையாக ஒருங்கிணைந்து வாக்வேண்டும். சகல சௌபாழகியங்களுடனும் இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழவேண்டும் என்றும் கூறினார். (க-இ)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, elephone 389 - Registered as a Newspaper in SriLanka